Registered at the G. P. O. as a Newspaper வாரப் பதிப்பு விலை சதம் 15

# ஈழநாடு

தேசிய தினசரி National Tamil Daily

போன்: 369 தபாற் பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஆனி 15ஆம் நாள் ஷபர் பிறை 17 (28-6-64) ஞாயிற்றுக்கிழமை இதழ் 14

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு

# 'தமிழனின் தனிச்சிறப்பு கம்பன் கவிச்சிறப்பே

## 'இராமாவதாரம்' ஒருகலைஞானபொக்கிஷம்'

### கம்பன் விழாவில் நீதியரசர் தம்பையா பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

**"அறநெறியிற் சென்றவர் புகழும் அறநெறியில் வழுவியவர் பழியும் பெறுவர் என்ற வள்ளுவரின் கூற்றை அழகுற எடுத்துக் காட்டியவர் கம்பர். வள்ளுவர் இலக்கணத்துக்கு இலக்கியம் படைத்தவர் கம்பர். அறமே நல்வாழ்விற்கு அத்திபாரம். தனி மனிதனையும், ஒரு சமூகத்தையும், ஒரு நாட்டையும் அறமே செம்மையுறச் செய்யும் என்னும் பண்டைய இலக்கியங்களின் கூற்றை அழியாத சொற்சித்திரமாக்கியவர் கம்பர்".**

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற கம்பன் விழாவிற்கு தலைமை தாங்கி பேசும்போது நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியூ. சி. மேற்கண்டவாறு கூறினார்.

**கவிச்சக்கரவர்த்தி கம்பன்**

"இன்று உலக மகாகவிகளில் உயர்ந்து விளங்கும் கவிச்சக்கரவர்த்தியாம் கம்பன் திருவிழாவினைக் கொண்டாடுகிறோம். கம்பன் இராமாவதாரம் தந்து தமிழினை வளம்படுத்தி விட்டான். கம்பனின் இராமாவதாரம் கலைஞானப் பொக்கிஷம், கவிதைப் பூங்காவில் வளர்ந்த வாடாத மலர். சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்து ஓசை நயம் மிகுந்து நவரசங்களும் மலிந்து தமிழ் நாகரிகத்தின் சின்னமாக மிளிர்வது. கற்பனை வளத்தில் சிறந்து கவிஞருக்கெல்லாம் உயர்ந்த அருமருந்தாகப் பயன்படுவது. தமிழனின் தனிச்சிறப்பு கம்பனின் கவிச்சிறப்பேயாகும். கலைத்திறமுடையதாய், அற்புத சித்திரமாய் அறிவிற்கு இனிப்பது அவன் பாட்டு. குணங்களில் உயர்ந்திட நலம் கொடுக்கும். ஜாதி மதங்களை மறந்திடவும், சமரச உணர்ச்சிகள் நிறைந்திடவும், நீதியை, அறங்களை நினைப்பூட்டவும், நிரந்தரக் களஞ்சியமாக அவன் பாட்டு விளங்குவதாக ஒரு கவிஞர் கூறுகிறார். பாரதியாரும் "யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவன் போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை என்றும் புகழ்ச்சியில்லை" என்றார். கம்பர் "எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வம் எய்தலாலே இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லையிதோ" என்று சமரச கீதம்பாடியதை, பாரதியும் "எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்று வழி வழி வந்த கவிஞனைத் தமது பாவின் திறத்தாலே விளக்கினர்" என்றும் நீதியரசர் குறிப்பிட்டார்.

கம்பன்விழா என்றும் நின்று வற்றாதசெல்வத்தை வாரிவழங்க வேண்டும் வாழ்வில்நின்றுஉற

(10-ம் பக்கம் பார்க்க)

---

ஓயாது உழைத்த

## இந்தியப் பிரதமர் திடீர் சுகயீனம்

### பூரண ஓய்வெடுக்குமாறு டாக்டர்கள் ஆலோசனை

புதுடில்லி, ஜூன் 27

இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரி ஓய்வில்லாது கடுமையாக உழைத்ததினால் அவருக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. டாக்டர்கள் அவரை பூரண ஓய்வு எடுத்துக்கொள்ளுமாறு ஆலோசனை கூறியுள்ளதால் அவரின் முக்கிய நிகழ்ச்சிகளையும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

நேற்றிரவு ஜுரம் கண்ட திரு. சாஸ்திரியின் தேகநிலையில் இன்று பிற்பகலுக்கு பிறகு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாக டாக்டர்கள் தெரிவித்தனர். இன்று டாக்டர் ராதா கிருஷ்ணன், திரு. காமராஜ், திருமதி இந்திரா காந்தி, திருமதி விஜயலஷ்மி பண்டிட் உட்பட பலர் பிரதமரின் வீட்டுக்கு சென்று வந்தனர்.

பிரதமராக பதவியேற்றதிலிருந்து திரு. சாஸ்திரி நாளொன்றுக்கு 18 மணித்தியாலங்கள் ஓய்வெடுக்காது வேலை செய்தார். இதுவே இவரின் திடீர் சுகயீனத்துக்கு காரணமென தெரியவருகிறது.

## பால்தேநீர் விலை உயரலாம்

கொழும்பு, சனி

ஒரு கோப்பை பால் தேநீரின் விலையில் மூன்றுசதம் (பதின்மூன்றுசதம்) அதிகரிப்பதென்று கொழும்பிலுள்ள பல ஹோட்டல்கள் முடிவுசெய்துள்ளன. இது சம்பந்தமான அறிவித்தல்கள் பல ஹோட்டல்களில் மாட்டப்பட்டுள்ளன. கட்டிப்பாலின் விலை அதிகரிப்பே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

---

## பாராளுமன்ற திறப்புவிழா

### ஜனப்பிரதிநிதிகள் சபையில் நடைபெறும்

கொழும்பு, சனி

**பாராளுமன்ற திறப்புவிழா ஜூலை மாதம் இரண்டாம் திகதி ஜனப்பிரதிநிதிகள் சபையில் நடைபெறும். நேற்று நள்ளிரவு நடைபெற்ற மந்திரிசபையின் அவசரக் கூட்டத்தில் மேற்கண்டமுடிவு செய்யப்பட்டது. இதுசம்பந்தமான விசேஷ "கசெட்" அறிவித்தல் ஒன்று இன்று வெளியானது.**

பாராளுமன்றத் திறப்புவிழா சம்பந்தமாக நேற்று இரவு மந்திரிசபை அவசரமாகக்கூடி ஆராய்ந்தது. மூன்றுமணி நேரமாக நடைபெற்ற கூட்டத்துக்குப்பின்னர் பாராளுமன்றத் திறப்புவிழாவை ஜனப்பிரதிநிதிகள் சபையில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. அவசரக்கூட்டம் இன்று அதிகாலை 2 மணிவரை நடைபெற்றது.

பாராளுமன்ற திறப்புவிழாவை சுதந்திரசதுக்கத்தில் நடத்தவேண்டுமென்று முன்னர் அரசாங்கம் தெரிவித்த யோசனையை எதிர்க்கட்சியினர் ஆட்சேபித்திருந்தனர்.

ஜனப்பிரதிநிதிகள் சபையில் திறப்புவிழா முடிவடைந்ததும் சுதந்திர சதுக்கத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தில் பிரதமர் உட்பட சுதந்திரக்கட்சி, ஸ்ரீலங்கா சமசமாஜ கட்சி எம். பி.க்கள் சொற்பொழிவு நிகழ்த்துவர்.

---

## பயங்கர கொள்ளைக்கோஷ்டியினர் கைதடியில் கைது!

### யாழ்ப்பாணப் பொலிஸாரின் தீவிர நடவடிக்கையின் பலன்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சென்ற சில வருடங்களாக யாழ்ப்பாண நகரிலும் சுற்றுப்புறங்களிலும் இயங்கிவந்த ஒரு கொள்ளைக் கோஷ்டி வவுனியாமாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான துணிவகைகளை கொள்ளையடித்துக்கொண்டு வரும்பொழுது மோட்டார் காரும், சாரதியும், கள்வரும், கொள்ளைக்கு உபயோகிக்கும் ஆயுதங்களுமாக காத்திராப் பிரகாரமாக யாழ்ப்பாணப் பொலிசாரிடமே சிக்கவேண்டிய ஒரு சம்பவம் நேற்று நடைபெற்றது.

முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபின் அமரசேன என்பர் தலைமையில இயங்கிவந்த இந்தக்கோஷ்டி கொள்ளையடிப்பதே தமது தொழிலாகக்கொண்டிருந்தது. இக்கோஷ்டியை ஒழித்துக்கட்ட யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் சுப்ரின்டண்ட் திரு. ஏ. எஸ். மரியநாயகம் எடுத்துக்கொண்ட பெருமுயற்சி காரணமாக யாழ்ப்பாணத்தில் பொலிஸ் கண்காணிப்பு அதி

(10-ம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றதீர்ப்புக்கு அரசாங்கம் மறுப்பு!

ஸாலிஸ்பரி, ஜூன். 27

ஆபிரிக்க தேசிய தலைவர் ஒருவருக்கும் அவருடைய ஆதரவாளர்கள் இருபது பேருக்கும் எதிராக தென்ரொடிஷிய அரசாங்கம் தடைவிதித்திருந்தது. இத்தடை சட்டத்துக்கு விரோதமானது என்று சாலிஸ்பரி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆனால் இத்தீர்ப்பையும் எதிர்த்து அவர்களை விடுதலை செய்ய தென்ரொடிஷிய அரசாங்கம் மறுப்பு தெரிவித்துள்ளது. நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக தென்ரொடிஷிய அரசாங்கம் மேற்கொண்ட இந்த நடவடிக்கையை பல நாடுகள் கண்டித்துள்ளன.

## இந்தியர்களை கப்பூர் இன்று சந்திப்பார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இந்திய ஹைகமிஷனர் திரு. பி. கே. கப்பூர் இங்குள்ள இந்தியர்களை சந்திக்கும்பொருட்டு இலங்கை-இந்தியர் சங்கக் காரியாலயத்திற்கு இன்று காலை 9 மணிக்கு விஜயம் செய்வார். இந்தியத் திரைப்படக் காட்சியும் இடம்பெறும்.

## அரசாங்க ஊழியரின் சம்பளம்

### தொழிற்சங்கம் யோசனை

கொழும்பு, சனி

அரசாங்க ஊழியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒரே முகமான சம்பளம் வழங்கப்படவேண்டுமென்று பல தொழிற்சங்கங்கள், நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேராவுக்கு யோசனை கூறியுள்ளன. ஒரு அரசாங்க ஊழியரின் கூடுதலான சம்பளம் ஆயிரத்து இருநூற்றைம்பது ரூபாவாக இருக்கவேண்டுமென்றும் இதற்கு வகை செய்யும் பொருட்டு உயர் பதவிகள் வகிக்கும் அரசாங்க அதிகாரிகளின் சம்பளம் குறைக்கப்படவேண்டும் என்றும் தொழிற் சங்கங்கள் யோசனை தெரிவித்துள்ளன.

# கலையில் ஆன்மீகம் போற்றிய சிற்பாசாரி

—'சனு'—



நமது முன்னோர்கள் பரம்பரையாகப் பேணிக்காத்து வந்த கலைச் செல்வங்களே, இன்றைய பரம்பரைக்குச் சிறப்பையும் பெருமையையும் ஈட்டிக்கொடுக்கின்றன. நமக்கு மட்டுமல்ல நம்மை நாடி வரும் பிறநாட்டினரும் அவற்றைப் போற்றி வணக்கஞ் செய்யக் கூடியதாக நமது வழி வழி வந்த முன்னோர்கள் இவ்வாறு சிறப்புற வாழ்ந்தார்கள். அவர்களது மதிநுட்பமும், கலைநுட்பமும் ஈடும் எடுப்புமில்லாதன வென்பதையும் உணர்த்துவன அவை.

இந்தக் கலைகள் ஒரு காலத்தே தோன்றி அந்தக் காலத்துடன் நின்றுவிட்டால் எமக்குப் பெருமை ஏது? தொடர்ந்து பழைய மரபோடொட்டிப் பூத்துக் குலுங்கிக் காலம்முழுவதும் நம் மத்தியில் நீண்டு நிலை பெற வேண்டும். இந்த நிலையை நிறுவுவதற்கு கலையென்ற பெருமரத்தின் வித்துகள் தோன்றுகின்றன. இல்லையேல் இக்கலைகள் ஒரு கால கட்டத்துடன் நின்றுவிடக்கூடும். இவ்விதம் உயர்வு பெற்ற கலைக்கு காலம் காலமாக ஒரு பரம்பரை தனது மேலான தொண்டைச் செய்தே வருகின்றது. அவர்களது தொடர்ந்த தேர்ச்சியான செயல்களே இன்றைய கால கட்டத்திலும் பழமையின புனிதத்தை - பூரணத்துவத்தை நம்முன் நிதர்சனமாக விளக்கி வருகின்றன.

ஈழமணித்திருநாடு என்றைக்கும் பண்டைய கலைகளின் உயர்வுக்கு ஏனைய நாடுகளிலும் பின்தங்கியதல்ல. இங்குள்ள ஆலயங்கள் நம்மவரின் கைவண்ணத்தை நிலைநிறுத்துகின்றன. கலைகளிலே சிறந்தவர்கள் பரம்பரைப் பெருமையைத் துண்டிக்காது வாழ்ந்து வருவதே இத்தகைய மேம்பாட்டுக்குக் காலாக விளங்குகின்றது. கலைமிகு கோவில்களே எமது பண்பாட்டின் அழியாத நினைவுச்சின்னங்கள்; நம்மவர்களின் ஆத்மீக வாழ்வுக்கு வழி வகுப்பவை. இங்கே கலைகளின் கைவண்ணம் ஓங்குவதற்கு சிற்பாசாரியர்களின் பங்குதான் மிக முக்கியமானதாகும். கோவிற்தேர்களும், கோவில் வாகனங்களும் அன்னாரின் பண்பையும் சிறந்த கலைநுட்பத்தையும் நமக்கு உணர்த்துவதுடன், நம்மைத் தம்வசப்படுத்தி ஆன்மீக வாழ்வுக்கு இட்டுச்செல்லும் அருளையும் அளிக்கின்றன என்றால் அது மிகைப்பட்டதல்ல.

இத்தகைய அருங்கலைச் சிற்பாசாரியராக நம்மத்தியில் வாழ்ந்தவர் சிற்பாசாரியார் திரு. ஆறுமுகம் அவர்கள். கடந்த நூற்ருண்டின் இறுதிக் கட்டத்திலே தோன்றியவர்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. ஆறுமுகம் அவர்கள் பரம்பரையிலே - சாஸ்திரிக அறிவு நிரம்பிய சிற்பாசாரியர்களாக விளங்கிய குடும்பத்தில் தோன்றியவர். இளமையிலிருந்தே இவரிடம் இந்தக் கலையார்வம் மிகுந்து காணப்பட்டது. குலவித்தை கற்றுப் பாதி கல்லாமல் பாதி என்ற வகையில் தொழிலுக்கான பயிற்சியாக அத்தொழிலை வைத்துக் கொள்ளாது சரியான கலைஞானம் பெற வேண்டுமென்பது இவரது அடங்காத ஆவலாகும்.

'மானிடராகப் பிறத்தல் அரிது; அதனிலும் அரிது கூன் குருடு நீங்கிப்பிறத்தல்'; அதனிலும் அரிது நடராஜப் பெருமானைச் சிருஷ்டிக்கும் கலை கைவரப் பெறல். ஏனெனில் இத் திவ்யவடிவம் மக்களுக்கு பரம்பொருளின் உண்மையைஉணர்த்துகிறது. இந்த உண்மையை உள்ளத்தே கொண்ட இச்சிற்பாசாரியார் அக் காலத்தில் தஞ்சைமாநகரில் சிறந்த சிற்பாசாரியராக மிளிர்ந்த நாராயணசாமி என்பவரிடம் கலைப் பயிற்சி பெறுவதற்காகச் சென்று, அங்கு மூன்று ஆண்டுகள் சிட்சை பெற்றுத் தம்புலமையை மேம்படுத்திக்கொண்டார்.

ஒரு சமயம் இவர் ஒரு சிற்பாசாரியாரிடம்சென்றபோது, அவர் இவரை ஓர் இடபசித்திரம் வரையும்படி கேட்டுக் கொண்டார். இவரும் உடனேயே அச் சித்திரத்தை வரைந்துவிட்டார். அந்தச் சித்திரததின் சிறப்பைக் கண்டு இவரது காலடியில் சாஷ்டாங்கமாக விழுந்து அந்தச் சிற்பாசாரியார் வணங்கிஞர். அந்தச் செயலைப் பொறுக்கமுடியாது அவரது கைகளைப் பற்றி 'அபசாரம்!' என்று இவர் கூறிய போது அவர், இவரது தாடையில் அறைந்து "பைத்தியகாரா! யான் உன்னை வணங்கவில்லை. உன்னிடமுள்ள கலைத்தாயை வணங்குகின்றேன்" என்றாராம் இவரிடம்இயற்கையாகவே கலாதேவி வாசஞ் செய்து வந்தாள் என்பதற்கு இக்கதை ஓர் உதாரணமாகும்.

எந்த உருவத்தை எந்தக் கோணத்திலிருந்தும் வரைவதிலும் சிறந்தவர் இவர். அன்னம் போன்ற சித்திரங்களை காலிலிருந்துதொடங்கி அதனை அழகும் அமைப்பும் கொண்டதாக முடித்துவிடுவார்.

(4-ம் பக்கம் பார்க்க)

# இந்த வாரம் உங்கள் இராசி பலன் எப்படி?

"அத்திரி" எழுதுகிறுர்

[28-6-1964 தொடக்கம் 4-7-1964 வரை]

**மேடம்**

(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) உங்கள் நண்பர் வழியால் உங்களுக்கு பல நன்மையான காரியங்கள் இந்தவாரத்தில் நடைபெறும். முன் ஒருகாலத்தில் உங்களுடன் மனவேற்றுமைப்பட்டிருந்த நண்பர் ஒருவர் இந்த வாரத்தில் உங்களுடன் உறவு கொண்டாட எத்தனிப்பார். பெருந்தன்மையுடன் அவர்களுடைய பழைய குறைகளை மறந்து அவர்களை ஏற்றுக் கொள்ளுங்கள் வாகனங்கள் முதலியவற்றில் பணஈடுசெய்திருக்கும் இந்த இராசிக்காரர்களுக்கு இந்தவாரம் அவ்வளவு அநுகூலமான பலன்கள் கிடைககாது.

**இடபம்**

(கார்த்திகை 2, 3, 4-ம் பாதங்களிலும், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுடைய பெருந்தன்மையான போக்கையும் விரிந்த மனப்பான்மையையும் தவருக எண்ணிக்கொண்டு பலவிதமான தொல்லைகளைத் தருவார்கள். இவர்களை நீங்கள் பொருள் படுத்தாமல் விடுவது நலம். பண ஆசைபிடித்த நண்பர்கள், உங்களைத் தப்பான பாதைக்கு இழுத்துச்செல்ல முயற்சிப்பார்கள். மிகவும் நிதானமாக நடந்துகொண்டீர்களானல் மற்றவர்களின் தலையீட்டைச் சமாளிப்பீர்கள் மனத்துணிவுடன் நீங்கள் விரும்பியபடி நிதானத்துடன் நடந்து கொள்ளுங்கள்.

**மிதுனம்**

(மிருகசீரிடம், 3, 4-ம் பாதங்களிலும், திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3-ம் பாதங்களிலும ஜனனமானவர்களுக்கு) இந்த வாரம் பல தொல்லைகளுடன் ஆரம்பமானலும் போகப்போக நிலைமை சீரடைந்துவிடும். வார ஆரம்பத்தில் அனவசியமான சச்சரவுகளுக்கு ஆளாக வேண்டியிருக்கும் எதற்கும் மௌனமாக சகிப்புத்தன்மையுடன் நடந்துகொள்ளவும். உங்கள் பலவீனத்தை மற்றவர்கள் அறிந்து கொண்டால் உங்களை ஆத்திரமூட்டி நிலைமையை சீர்கெட்டுப்போகச்செய்வார்கள். எதிரிகளின் தூண்டுதலின்பேரில் பலர் உங்களுக்குத் தொல்லைகள் தருவார்கள்.

**கடகம்**

(புனர்பூசம் 4-ம் பாதத்திலும், பூசம், ஆயிலியத்திலும் ஜனனமானவர்களுக்கு) உங்கள் குடும்பத்தில் இந்தவாரம் சுகக்குறைவுகள் அதிகரிக்கும் பொதுவாகக் குழந்தைகளின் சுகம் பாதிக்கப்பட்டாலும் உங்கள் சுகத்தை மிகவும் சிரத்தையுடன் கவனியுங்கள். தாய் வழி உறவினர் ஒருவர் உங்கள் உதவியைநாடி வருவார். பொது விஷயங்களில் உங்களுடைய ஆதரவை நாடி வரும் நண்பர்களுக்கு உதவ வேண்டிய நிர்பபந்தங்கள் ஏற்படும். தெய்வீக விஷயங்களுக்காக இத்தவாரம் அதிகபணம் செலவழிக்க நேரிடும்.

**சிங்கம்**

(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதத்தித் ஜனனமானவர்களுக்கு) பொதுவிஷயங்களில் பங்கெடுத்துக் கொள்ளும் இந்த ராசிக்காரர்கள் அனவசியமான முற்கோபத்தை அடக்கிக்கொள்ள வேண்டியிருக்கும். உங்களுடைய பணநிலைமையை அறியாத சிலர் உங்களை நச்சரிப்பார்கள். ஏழ்மைநிலை அடைந்த நண்பரொருவர் உங்கள் உதவியை நாடி வருவார். அவருக்கு தகுந்த உதவி புரிவதால் உங்களுடைய அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வீர்கள். வியாழக்கிழமை கொடுக்கல் வாங்கல் செய்ய மிகவும் அனுகூலமான நாள்.

**கன்னி**

(உத்திரம் 2, 3, 4-ம் பாதங்களிலும், அத்தம், சித்திரை 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) இந்த வாரம் ஏற்படப் போகும் தவிர்க்க முடியாத சில செலவினங்கள் உங்களுக்கு, பின்னுக்கு மிகுந்த நன்மையைத் தரக்கூடியதாக அமையும். சகோதரிவழி உறவினர்களால் சில நன்மைகளை இந்தவாரத்தில் எதிர் பார்க்கலாம். பழைய அனுபவங்கள் இந்த வாரத்தில் உங்களுக்கு மிகவும் உதவியான முறையில் பயன்படும். உங்களைக் கட்டுப்படுத்தி தங்களுடையவழிக்கு முயலுபவர்களுக்குஇடம்கொடுககாமல் நடந்துகொள்ளவும். உணவுவிஷயத்தில் மிகவும் அவதானமாக இருக்கவும்.

**துலாம்**

(சித்திரை 3, 4-ம் பாதங்களிலும், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுக்கு இந்த வாரததில் செலவினங்கள் அதிகரித்தாலும் பணவருவாய்க்கு இடமுண்டு. உங்கள் உறவினர் ஒருவர் இந்த வாரத்தில் மறையக்கூடும். இதனல் உங்களுக்கு பெரும் நஷ்டமும் மனவதனையும் ஏற்படும். எந்தவிதமான பொறுப்புக்களையும் இந்த வாரத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடாது. எந்தக் காரியத்திலும் தாமதமான போக்குகள காணப்படும்.

**விருச்சிகம்**

(விசாகம் 4-ம் பாதத்திலும், அனுஷம் 1 கேட்டையிலும் ஜனனமானவர்களுக்கு)உங்கள் வைத்தியச் செலவுகள் இந்த வாரத்தில் அதிகரிக்கும். உங்களுக்கு இந்த வாரத்தில் அதிகமான பெலவீனம் இருப்பதாக உணர்வீர்கள். இருதய நோயினல் பீடிக்கப்பட்டிருக்கும் இந்த ராசிக்காரர்களுக்கு நோயின் தன்மை கூடுதலாகக் காணப்படும். மனஉற்சாகம் குறைந்து மிகவும் சோர்வாகக் காணப்படுவீர்கள். வாய்வு சம்பந்தமான கோளாறுகள் இந்த வாரத்தில் அடிக்கடி தலைகாட்டும். செவ்வாய்க்கிழமை கொடுக்கல் வாங்கல் செய்ய மிகவும் அனுகூலமானநாள்.

**தனுசு**

(மூலம், பூராடம். உத்திராடம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) மனச்சோர்வடையாமல் முன்னேற்றத்துக்குரிய பாதையில் செல்வீர்களானல் பின்னுக்கு நன்மை அடைவீர்கள். நீங்கள் ஆசைப்பட்டபடி நடந்து கொள்ள முடியாமல் சூழ்நிலைகள் தடுத்துவிடும். பண்புகுறைந்தமுறையில் சில உறவினர்கள் நடந்துகொள்ளுவதின் மூலம் உங்கள் காரியங்கள் தடைப்பட்டு பின் தாமதத்தில் கைகூடும். நீங்கள் பல காலமாக எதிர்பார்த்த காரியம் ஒன்று இந்த வாரத்தில் பல சிக்கல்களுக்குள் நடைபெறும்.

**மகரம்**

(உத்திராடம், 2, 3, 4-ம் பாதங்களிலும் திருவோணம், அவிட்டம், 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்கள் பொறுமையை மற்றவர்கள் சோதிப்பார்கள். சகிப்புத் தன்மையை மிகவும் நிதானமாக கடைப்பிடிப்பீர்களானல் எந்த விஷயத்தையும் எளிதில் சாதிப்பீர்கள். எந்தக் காரியத்தையும் தருணத்துக்குத் தகுந்த மாதிரி சாமர்த்தியமாகவும் சாகசமாகவும் செய்யவும். அதனல் நன்மையுண்டு. நீங்கள் எதிர்பார்த்தபடி மற்றவர்கள் உங்கள் விருப்பத்திற்கு நடக்க மாட்டார்கள். விட்டுக் கொடுத்து நடப்பதன் மூலம் எந்தக்காரியத்தையும் சுலபமாகச் சாதிக்கலாம்.

**கும்பம்**

(அவிட்டம் 3, 4-ம் பாதங்களிலும்,சதயம்,பூரட்டாதி 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுககு இந்த வாரம் பொருளாதார விஷயத்தில் சில நன்மைகள் ஏற்படும். முன் கைவிட்டுப் போன சில பொருட்கள் இந்த வார இறுதிக்குள் உங்கள் கைக்கு வந்துசேரும். நண்பரொருவரின் கொடுக்கல் வாங்கல் பிணக்குகளை அதிருப்தியானமுறையில் தீர்த்துவைக்க வேண்டிய நிர்பபந்தம் உங்களுக்கு ஏற்படும். பொருள் விஷயமான காரியங்களில்

(3-ம் பக்கம் பார்க்க)


"லேடன்" LEYDEN

தயாரிப்புகள்:-

- பெனியன்கள்
- ஸ்போட் சேட்டுகள்
- ரி சேட்டுகள்
- சூால் மேசுகள்

(Nylon & Woolen)

லேடன் இன்டஸ்றீஸ் லிமிடெட்

7, ஆஸ்பத்திரி வீதி :: :: யாழ்ப்பாணம்






சவுக்காரம் வாங்கும் போது மில்க்வைற் நீல சவுக்காரம என்று கேட்டு வாங்குங்கள.


இது ஒரு சிறந்த தயாரிப்பு.

மில்க் வைற்

நீல சவுக்காரம் ஒன்றே உங்கள் சலவை வேலையை பூர்த்தி செய்கிறது.

# நவாலி அட்டகிரி கந்தசாமிகோயில் புனருத்தாரணம்

—வி. என். பி.—



நிருத்த மண்டபம் திருத்தப்படுகிறது

இயற்கை யன்னையின் கொள்ளை வனப்புகள் நிறைந்த சூழ்நிலையில் விளங்கும் இத் திருக்கோயில் நவாலியிலுள்ள மிகத் தொன்மை வாய்ந்த கோயில்களில் ஒன்று. இங்கு வழக்கம்போல திருவிழா நடப்பதாயிருந்தால் சென்ற பௌர்ணமியன்று தேர்த் திருவிழா நடந்திருக்கும். ஆனால் இரண்டு வருடமாக திருவிழாக்கள் நடைபெறவில்லை.

கோயிலிலுள்ளமூலஸ்தானத் தூபி, ஆறுமுகசாமி தூபி, மகா மண்டபம், நிருத்த மண்டபம், யாகசாலை, பாக சாலை, தேர், தேர்முட்டி, பிள்ளையார் தூபி முதலியன தக்க கவனிப்பில்லாமல் இடிந்துவிழும் நிலையிலிருந்தன. இதைக் கவலையுடன் நோக்கிய கோயில் குருக்கள்மாரும் ஊர் மக்களும் ஒன்று கூடி 1963-ம் ஆண்டு வைகாசி மாதம் 18-ம் திகதி ஒரு திருப்பணிச் சபையைத் தோற்றுவித்தனர்.

இச்சபைக்கு போஷகர்களாக திருவாளர்கள்: ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி., ம. கார்த்திகேசன், இரா. சபாநாயகம், முதலியார் வை. மகேசன், டாக்டர் ஜி. விக்கினராஜா, டாக்டர் செ. மயில்வாகனம், சாமி விஸ்வநாதக் குருக்கள் ஆகியோரும், தலைவராக கோயில் மணியகாரர் திரு. ப. செல்லையாவும், காரியதரிசியாக பிரக்கிராசி க. சோமாஸ்கந்தனும் தெரிவு செய்யப்பட்டனர். திருப்பணி சபை முழுவதிலும் 22 அங்கத்தவர்கள் இருக்கிறார்கள்.

18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த இலங்கை நாராயண முதலியார் என்பவருக்கு ஈஸ்வர பக்தி மிகுந்த கதிரைமலை என்ற பெண்மணி மனைவியாக வாய்த்தாள். இவ்வம்மணி மிகவும் சிரமப்பட்டு ஒருசமயம் கதிர்காமத்துக்கு யாத்திரை செய்து திரும்பியதும், அவருக்கு ஒரு வேல் அனுப்பி வைக்குமாறு அந்த க்ஷேத்திரத்தில் பணியாற்றும் கப்புறாலை ஒருவருக்கு கனவில் உத்தரவு பிறந்தது. அவரும் உடனே வட்டுக்கோட்டையைச் சேர்ந்த யாத்திரிகர் ஒருவரிடம் ஒரு வேலைக் கொடுத்து அதை நவாலியிலுள்ள கதிரைமலை என்ற அம்பாளிடம் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். அம்மனிதர் அதைக் கதிரைமலையிடம் கொடாமல் தாமே வைத்துக் கொள்ள ஒரு நாள் அவருடைய வீடு தீப்பற்றிக்கொண்டதாம். உடனே அவர் தாம் செய்த பிழையை உணர்ந்து வேலை கதிரமலையிடம் சமர்ப்பித்துவிட்டார்.

இலங்கைநாராயண முதலியாரும் அவருடைய மனைவி கதிரைமலையும் வேலை அன்புடன் ஏற்றுக்கொண்டு தங்களுடையகாணி ஒன்றில் அதற்குத்திருக்கோயில் கிறுவினார்கள். கோயில் பரிபாலனத்துக்கு போதியளவு நிலங்களையும் தர்மசாதனம் செய்தனர். கடந்த 150 வருடங்களாக அட்டகிரி கந்தசாமி கோயிலில் கிரமமாக திருவிழா நடந்து வருகின்றது.

இலங்கை நாராயண முதலியாரின் பேரன் வேலாயுதர் என்பவர். இவருடைய பேரன் இலங்கைநாதர் பதினைந்து வருடங்களுக்கு முன்பு நவாலியில் இறந்துவிட்டார்.

17, 18-ம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கீச, டச்சுக்காரரின் கொடுங்கோல் ஆட்சி நடந்தபோது வேதாரண்யத்திலிருந்து வந்த சில ஓதுவார்களும் தேசிகர்களும் அட்டகிரி கந்தசாமி கோயிலிலேயே மடம் கட்டி அங்கிருந்தவாறு பொது மக்களுக்குச் சமயத்தொண்டு செய்தனர். இவர்களைப் பொதுவாக 'குருக்கள்' என்று அழைப்பார்கள். எனவே, அட்டகிரி கோயிலுக்கு 'குருக்கள் கோயில்' என்றும் பெயர் வரலாயிற்று.

இந்தத் தகவல்களை மேற்படி திருப்பணி சபையின் பொருளாளர் திரு. சி. எஸ். நவரத்தினம் எமக்குத் தந்துதவினார்.

புனருத்தாரண வேலைகள் துரிதமாக நடக்கின்றன. பூரணமாக எல்லா வேலைகளும் செய்து முடிக்க சுமார் 50,000 ரூபாய்க்கு மேலாகலாம். ஆனால் அந்தளவு தொகை இன்னும் வசூலாகவில்லை. அடுத்த இரண்டொரு மாதங்களில் - அதாவது மழை காலம் தொடங்கு முன்பு - போதிய பணம் சேர்ந்தால்தான் வருகிற தை மாதத்தில் கும்பாபிஷேகம் செய்து அடுத்த ஆனி வருடப் பட்சத்துக்கு திருவிழா நடத்தலாம்.

இப்புனிதமான கைங்கரியத்துக்கு பொருளுதவி செய்ய விரும்பும் முருகன்பர்கள், சி. எஸ். நவரத்தினம், (பொருளாளர், அட்டகிரி கந்தசாமி கோயில் திருப்பணிச் சபை), நவாலி வடக்கு மானிப்பாய் என்ற முகவரிக்கு தங்களாலான பொருளுதவியை அனுப்பலாம்.

## இராசி பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பிணை நிற்க வேண்டியிருந்தால் மிகவும் அவதானமாக நடந்து கொள்ளவும். பொறுத்த நேரத்தில் அந்தப்பிணை உங்களுக்குத் தொல்லையைத்தரும்.

**மீனம்**

(பூரட்டாதி 4-ம் பாதத்திலும், உத்தரட்டாதி ரேவதியிலும் ஜனனமானவர்களுக்கு) இந்த வாரத்தில் உங்களுக்கு பணத்தட்டுப்பாடு அதிகமாக இருக்கும். கைவசம் இருக்கும் பணத்தைக் கூடக் கைவிட்டு விட்டு தவியாய்த் தவிப்பீர்கள். உங்கள் கையில் வந்துசேரும் பணத்தை இறுக்கிப் பிடித்தீர்களானால் சுகமடையலாம். மனநிம்மதியை நாடி ஒதுங்கி நடக்க தெண்டித்தாலும் மற்றவர்கள் உங்களைத் தேடிவந்து நச்சரித்துக் கொண்டேயிருப்பார்கள். குடும்பத்துக்குள் அநாவசியமான சச்சரவுகள் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும். அற்ப விஷயங்களுக்கும் கணவன் மனைவியிடையே பெரும் பூசல் கிளம்பிவிடும்.

# வடமொழி நாடகம்

— நவாலியூர் சோ. நடராசன் —

(முன் தொடர்ச்சி)

விதூஷகன்: போதும் போதும், இப் பெருந்துயர் தணியட்டும்.

அரசன்: நண்பா! இல்லை, அப்படியில்லை. என் மனதில் ஆழ்ந்து துயின்ற காதல் இந்த யாழைக் கண்டதும் விழித்துக் கொண்டது. கோஷவதியிற் பிரியமுடைய அந்த தேவியைக் காணேம். வசந்தக! கைதேர்ந்த சிற்பியைக்கொண்டு இக்கோஷவதியைப் புதுப்பித்து உடனே கொண்டு வா.

விதூஷகன்: தேவரீர் கட்டளைப்படியே. (வீணையை எடுத்துக் கொண்டு செல்கிறான்).

கதாநாயகனுடைய நண்பனை விதூஷகன் நாடகத்தில் வரும் ஒரு முக்கிய பாத்திரம். இவன் தனது தோற்றத்தாலும் செயல்களாலும் நகைப் பூட்டிக்கொண்டிருப்பான். இங்கும் விதூஷகன வரும் காட்சிகள் நன்றாக அமைந்துள்ளன. நோயுற்ற பத்மாவதியை காணச்செல்லுகிறான் மன்னன். அவனுக்கு வழிகாட்டிச் செல்லுகிறான் விதூஷகன். இக்காட்சி பின்வருமாறு:-

அரசன்: அந்தோ! கஷ்டம்! இளமைச் செல்வம் நிறைந்தவளும் சகல நற்குணங்களுக்கும் உறைவிடமானவளுமான ஒருத்தியைப் பெற்றபின் முன்னடைந்த துக்கத்தினால் இன்றும் துயருற்றிருக்கும் எனக்கு இன்று அத்துயர் சிறிது தணிந்திருந்தபோதிலும் ஒரு முறை துயரை அனுபவித்த நான் பத்மாவதிக்கும் இத்துன்பம் வருமென்றே எதிர்பார்க்கிறேன்.

இப்போது பத்மாவதி எங்கே?

விதூஷகன்: அவள் படுக்கை சமுத்திர இல்லத்திலிருக்கிறது.

அரசன்: அப்படியானால் வழியைக் காட்டு.

விதூஷகன்: இப்படி வருக, இப்படி வருக, அரசே!

(இருவரும் நடத்தல்)

விதூஷகன்: இதோ சமுத்திர இல்லம்; இங்கே செல்லுங்கள்.

அரசன்: நீ முதலிற் போ.

விதூஷகன்: அப்படியே (உள்ளே சென்று) ஐயோ! நில்லுங்கள், நில்லுங்கள் அரசே!

அரசன்: எதற்காக?

விதூஷகன்: இதோ பாம்பு நிலத்தில் சுருண்டு கிடக்கிறது. இந்த விளக்கொளியில் தெரிகிறது.

அரசன்: (உள்ளே பிரவேசித்துப் பார்த்து புன்முறுவல் செய்து) மடையன்; மாலையைப் பாம்பென்று நினைக்கிறான். முட்டாள். தோரணவாசலில் அசைந்துகொண்டிருந்த நீண்ட மாலை கீழே நிலத்தில் விழுந்துவிட்டது. அது மெல்லிய காற்றில் அசையும்போது பாம்பைப் போலத் தெரிகிறது. அதை நீ பாம்பென்று கருதிவிட்டாய்.

விதூஷகன்: (கூர்ந்து பார்த்து) தாங்கள் கூறுவது சரிதான். இது பாம்பன்று. (உள்ளே சென்று பார்த்து) அரசகுமாரி பத்மாவதி இங்கே வந்து திரும்பிவிட்டார்கள் போலிருக்கிறது.

அரசன்: நண்பா அவர் வந்திருக்கமாட்டார்.

விதூஷகன்: அது தங்களுக்கு எப்படித் தெரியும்?

அரசன்: அதில் என்ன சந்தேகம்? இதோ பார். சமமாக விரிக்கப்பட்ட படுக்கை குழம்பவில்லை. அதன் விரிப்புக்குலையவில்லை. தலைவலிக்குப் பூசிய பூச்சு மருந்தினால் பரிசுத்தமான தலையணை மலினமடையவில்லை. நோயுற்றவர்க்கு ஆனந்தத்தைக் கொடுப்பதற்கு சித்திரம்முதலிய அலங்காரங்கள் செய்யப்படவில்லை. நோயுற்றுப் படுக்கைக்குச் சென்ற ஒருவர் இவ்வாறு விரைவில் படுக்கையைவிட்டுத் தாமாக வெளியேறமாட்டார்.

விதூஷகன்: அப்படியானால் தாங்கள் இந்தப் படுக்கையில் சிறிதுநேரம் தங்கித் தேவியை எதிர்பார்த்திருங்கள்.

அரசன்: நன்று (இருந்து) நண்பா நித்திரை வருகிறது. ஏதாவது கதைசொல்லு.

விதூஷகன்: நான் சொல்லுகிறேன்; தாங்கள் 'உம்' கொட்டிக்கொண்டேயிருங்கள்.

அரசன்: நல்லது.

விதூஷகன்: உச்சைனி என்னும் ஒரு நகரம்உண்டு. அங்கே மிக அழகவாய்ந்த பல ஸ்நான மண்டபங்கள் உண்டு.

அரசன்: எப்படி? உச்சைனி என்று சொன்னாய்?

விதூஷகன்: என்ன! தங்களுக்கு இக்கதை பிடிக்காவிட்டால் வேறு கதை சொல்கிறேன்.

அரசன்: அப்படியில்லை. இந்தக் கதை பிடியாமலில்லை. ஆனால் அவந்தி ராசகுமாரியை நினைக்கும்போது துயருண்டாகின்றது. தனது சுற்றத்தவரைப் பிரிந்து என்னோடு போகப்புறப்படும்போது உண்டான துயரினால்கண்ணிலிருந்து ஊறி இமையில் வந்து நின்ற கண்ணீர்த் துளிகளை எனது மார்பகத்தில் அன்பினால் உகுத்தாள். அன்றியும், வீணை கற்பிக்கும் போது பலமுறை என்னையே பார்த்தபடி அவள் வீணையைக் கையிலிருந்து நழுவவிட்டு தாளலயமின்றிக் காற்றிலே வறிதே வாசித்துக் கொண்டிருப்பாள்.

விதூஷகன்: சரி, நான் வேறொன்று சொல்லுகிறேன். பிரமதத்தமென்ற பெயருடைய நகரமொன்றுண்டு. அங்கே காம்பிலியமென்ற பெயருடைய ஓர் அரசன் இருந்தான்.

அரசன்: எப்படி? எப்படி?

விதூஷகன்: பிரமதத்தமென்ற பெயருடைய நகரமொன்றுண்டு. அங்கே காம்பிலியனென்ற பெயரையுடைய ஓர் அரசன் இருந்தான்.

அரசன்: மடையா! பிரமதத்தனென்ற அரசன் காம்பில்லியமென்ற நகரத்திலிருந்தான் என்று சொல்லு.

விதூஷகன்: எப்படி? ராஜா பிரமதத்தன் நகரம் காம்பில்லியம்.

அரசன்: ஆமாம், அப்படித்தான்.

விதூஷகன்: அரசே சற்றுப் பொறுங்கள். இது வாயில் கொஞ்சம் நுழையும் வரை பாடமாக்குகிறேன். ராஜா பிரமதத்தன். நகரம் காம்பில்லியம். ராஜா பிரமதத்தன் நகரம் காம்பில்லியம் (இவ்வாறு பலமுறை சொல்லுகிறான்) இனிக் கேளுங்கள் அரசே! அடே! அவர்கள் நித்திரையாகிவிட்டார்களே. இந்நேரம் மிக்க குளிராயிருக்கிறது. இப்போது எனது போர்வையை எடுத்து வருகிறேன். (போகிறான்)

பாசருடைய நாடகங்களில் இதுவே சிறப்புடையதும் பிரசித்தமானதுமாகும்.

(தொடரும்)

## நெஞ்சகத்தில் நிறைந்து விட்டார்!

— "ஜீவா-நாவுக்கரசன்" —

வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சிகாண
வீரமகன் காந்தியொடு சிறையில்வாடி
ஆட்சிதனை எமதாக்கி அறப்போர்தாங்கி
அகிலத்தின் சோதியென சிறப்போடாற்றி
மீட்சிதனைக் கொடுக்காத நோயால்மாண்டாய்
மேருஎனும் நேருஜியே! காருணியா!
மாட்சிமிக்க பாரதத்தின் மணிவிளக்கே!
மனிதகுலக் காவலனே! மன்னர் மன்னு!

மனிதரெலாம் சுதந்திரமாய் வாழ்வதற்கும்
மானிலத்தில் நீதிநெறி நிலைப்பதற்கும்
இனித்தபுவி நாடெல்லாம் சென்று சேர்ந்து
இமயத்தின் பெருமைதனை ஏற்றுதற்கும்
இனிதினிதாய் வழிசொன்ன எங்கள் நேரு
இறந்துவிட்டார் என்றசெய்தி கேட்டபோது
தனித்திரங்கித் தரணியெல்லாம் கதறியழ
தாயெங்கள் நெஞ்சகத்தில் நிறைந்துவிட்டார்

★

## "பாரதத்தாய் ஏக்கம் போமோ"

— ஆசி. செல்வன் —

வானத்து வெண்மதியம் நிலைக லங்கி
வையத்தை இருளாக்கி மறைந்த தென்கோ!
பானத்தின் சுவைகண்டு நுகருங் காலை
பறித்தெறிந்த கயவனென நமன்ப றித்தான்.
கானத்தின் கனிவினிலே களிப்பில் மூழ்கும்
காதிற்கே இடியான செய்தி யன்றோ!
ஞானத்தின் முதுமையினை அகிலம் நீத்தே
நள்ளிரவிற் புயலுற்ற கலமா யிற்றே

அகிலத்தின் ஒளியன்ன அறிஞன் காத்த
அரசிற்குத் துயரந்தோ! அதனைப் போக்க
அகிலத்தில் ஒருசோதி வருமோ வான
அமரர்க்கே விருந்தான நேரு வென்னும்
முகிலைப் போல் ஒருநீதி மொழிவா ருண்டோ!
முடுகுற்ற பகை வெல்ல முயல்வா ராரோ!
இகலுக்கு வகைசொல்லும் வீர ரிங்கே
இனியுண்டோ பாரதத்தாய் ஏக்கம் போமோ?

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு ஆனி மீ 15உ (28-6-64)

# இரும்புத் திரை

கீரவெட்டி கோவில் திருவிழாவுக்காக காரைக்குடியிலிருந்து தமிழறிஞர் சொக்கலிங்கனர் வர முன்கூட்டியே எல்லா ஒழுங்குகளும் செய்யப்பட்டும் கடைசி நேரத்திலே அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. இதனல் பலருக்கும் பெரும் ஏமாற்றமும் வேதனையும்.

செலாவணி காரணங்கள் இதற்குக் கூறப்படினும், உண்மை அதுவல்லவென்றும் பாரத நாட்டுக்கும் ஈழத்துக்கும் கலாசார உறவுகளுக்கு இரும்புத் திரை போட்டு தடை செய்வதாகவே இருப்பதாயும் இலங்கையின் மேலான நன்மையை முன்னிட்டு, இந்த இரும்புத்திரையை நீக்க வேண்டுமென்றும் உடுப்பிட்டி பிரதிநிதி இலங்கை - இந்தியா நட்புறவுச் சங்க விழாவிலே உணர்ச்சியுடன் அறிவுறுத்தினர்.

அசோக சக்ரவர்த்தியின் புதல்வரும் புதல்வியும் பாரதநாட்டிலிருந்து பௌத்தத்தையும், புனித வெள்ளரசையும் இங்கு கொண்டுவந்ததை சென்ற வாரத்தில் பெரிய திருவிழாப் போல இலங்கையிலுள்ள பௌத்தர்கள் நன்றியுடன் கொண்டாடியதைப் பார்த்தோம். இவ்வித கலாச்சார செல்வங்கள் மேன்மேலும் பாரதநாட்டிலிருந்து தொடர்ந்து இங்கு வரவேண்டும். அப்போதுதான் சமூகத்திலே உயிருடன் கூடிய வளர்ச்சியுமிருக்கும்.

ஆனல் கண்மூடித்தனமான சட்டங்களைப் போட்டு இவ்வித கலாசார நல்லுறவுக்கு ஒருபுறம் இரும்புத்திரை போட்டு, மறுபக்கம் போசன் விழாவை கொண்டாடுவது விபரீதமல்லவா? இன்றைய கெடுபிடி சட்டங்களுக்கிடையே ஒரு மகிந்தாவோ, ஒரு சங்கமித்தையோ பாரதநாட்டிலிருந்து வரமுடியுமா? ஆட்சியாளர்கள் சற்றே சிந்திக்க வேண்டும்.

அரசியல், பொருளாதார பாதுகாப்புகள் சிறிய நாடான இலங்கைக்கு அவசியம் தேவைதான். ஆனல் இக்காரணம் சொல்லி, இருநாடுகளுக்கும் தொன்றுதொட்டு இருக்கும் கலாசார உயிரோட்டத்தை நிறுத்துவது தற்கொலைசெய்துகொள்ளுவதாகாதா?

செலாவணிச் சங்கடங்கள் இலங்கைக்கு மட்டுமன்றி இந்தியாவுக்குமுள்ளன. இவ்விரு அண்டை நாடுகளும் மனம்வைப்பின், பரஸ்பரம் செலாவணி நஷ்டமெதுவுமின்றி மக்களின் பிரயாண உரிமைகளைப் பறிக்காமல், இருதேச நல்லுறவுகளையும் வளர்க்கமுடியும். இருநாட்டு மக்களும் தாராளமாக யாத்திரை செய்ய முடியுமாயின்; தப்பெண்ணங்கள் நீங்கவும், நல்லுறவுகள் பலப்படவும், அதனல் இருதேசப் பிரச்னைகள் நீங்கவும் அது வழிசெய்யும் என்று காலஞ்சென்ற இந்திய பிரதமர் நேருஜி, இங்கு வந்திருந்தபோது தெரிவித்தார்.

நேருஜிக்காக இலங்கை பிரதமர் கண்ணீர்வடித்தார். டில்லிக்கு விரைந்து சென்று இந்தியாவின் துக்கத்தைப் பகிர்ந்துகொண்டார். நல்லதுதான். அதேசமயம் இருதேச பிரச்னைகளும் தீர, நேருஜி கூறிய நல்லதோர் யோசனையை, இலங்கை பிரதமரும் ஆட்சியாளரும் சற்றே சிந்தித்து காரியம் செய்யவேண்டுமென்று எதிர்பார்ப்பது மிகையல்ல.

ஈழத்திலே பெரும்பான்மைசமூகத்துக்கு பாரத நாடு எவ்விதம் கலாசார ஊற்றுக்கண்ணுக உள்ளதோ, அதே போலத்தான் சிறுபான்மை சமூகத்தவருக்கும் இவ்விரு சமூகத்துக்கும் வேறு என்ன வேற்றுமைகள் இருப்பினும் சரி இந்தியாவுடன் தொன்றுதொட்ட தொடர்பை, நீடித்து வளர்த்துக்கொள்ளவேண்டுமென்பதிலும், அங்கு யாத்திரை செல்லவேண்டுமென்பதிலும் பொதுவான ஆர்வம் அதிகமுண்டு.

பொதுமக்களின் மேலான விருப்பத்தை உணர்ந்து அதைக் கூடுமான வரை நிறைவேற்ற வேண்டியதே ஜனநாயக ஆட்சியின் முக்கியகடமையாகும். ஆனல் இன்றைய கடுமையான சட்டதிட்டங்கள் அமுல் செய்யப்படும் முறை இந்தப் புனித கடமைக்கு நேர்மாருகவுள்ளன.

இந்தியா-இலங்கை உறவு பற்றி 57 ஆண்டுகளுக்கு முன்பாக அறிஞர் டாக்டர் ஆனந்தகுமாரசாமி செய்துள்ள ஓர் அருமையான பிரசங்கத்தை இந்தியா - இலங்கை நட்புறவுச் சங்கத்தார் இச்சமயம் வெளியிட்டுள்ளது மிகவும் பொருத்தமும் பயனுமுள்ளதாகும். பொருளாதார அரசியல் உறவுகள் ஒருபுறமிருக்க, மானசீக ஆத்மீக உறவுகள் மிக முக்கியமென்றும், எதிர்காலத்திலே இந்தியா நமக்கு இன்னும் தாய்நாடாக இருக்கப் போகிறதா அல்லது நாம் அனுதைகளாக வாழப்போகிருேமா? என்று உணர்ச்சியுடன் கேட்டு, இந்தியாவுடன் ஆன்மீகத்தொடர்பை பலப்படுத்துவதன் மூலமே நமது எதிர்காலவாழ்வு சிறப்படைய முடியுமென்றும் அறிவுறுத்துகின்ருர் அப்பெரியார்.

இன்று இலங்கையிலே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளவர்களை, இவ்விஷயமாகச் சிந்திக்கச் செய்து, இப்போது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் போடப்பட்டுள்ள கலாசார இரும்புத்திரையை கூடிய விரைவில் நீக்க தேசாபிமானிகள் வெற்றி பெறுவதாயின். அதனல் இலங்கையின் எதிர்கால சுபீட்சத்தை அவர்கள் பாதுகாத்தவர்களாவர்.

ஈழவளநாட்டுச் சிவன்கோவில்கள்—6

# பொலனறுவை வானவன்மாதேவிஈஸ்வரமுடையார்

—வை முத்துக்குமாரசுவாமி பி. ஏ.—

ஏறக்குறைய ஓர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பொலநறுவை ஓர் இந்து நகரமாகத் திகழ்ந்தது. சோழர் கல்வெட்டுகளில் இந்நகரம் "நிகரிலி சோழவள நாட்டு புலைநரியான ஜனநாத புரம்" எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. புலைநரி என்பது புலஸ்திய நகரத்தின் திரிபு ஆகும். இதற்கு "ஜனநாதபுரம்" என்றும் "ஜனநாதமங்களம்" என்றும் சோழர் புனைந்துரையாக வழங்கினர்.

கி. பி. 985 தொடக்கம் சோழர்கள் அரசியலில் உச்ச நிலையை எய்தினர். அருண்மொழி வர்மன் 2-ம் பராந்தகனுக்கும் வானவன்மாதேவிக்கும் அருந்தவப் பேற்ருக உதித்தவன். இவன் 1-ம் இராசராசன் என்னும் பெயருடன் 985-ம் ஆண்டு ஜூன் 25-ம் நாள் அரசகட்டில் ஏறினன். இவன் ஆக்கிய பேரரசு இரண்டு நூற்ருண்டுகள் நிலைபெற்றது. இராசராசன் காலத்தைச் சோழரின் பொற்காலம் எனலாம்.

இராசராசன் கல்வெட்டுக்களில் இருந்து, அவனுடைய தீரவீரங்களை எல்லாம் அறியக்கூடியதாக இருக்கிறது. அவன் குடகு, கொல்லம், கங்கபாடி, நுளம்பாடி, தெலுங்கு நாடு, சாளுக்கியநாடு, கலிங்க நாடு முதலியவற்றை வென்று தன் ஆணையின் கீழ் வைத்தான்.

கி. பி 993-ல் வெளிவந்த கல்வெட்டுகளில் இராசராசன் ஈழமண்டலத்தை வென்றமை குறிக்கப்பட்டுள்ளது. அவன் பொலநறுவையைக்கைப்பற்றி, "ஜனநாதமங்கலம்" என்று பெயரிட்டான். அத்தலைநகரில் சிவன்கோவில் கதை, செங்கல் முதலியன கொண்டு அழுத்தமாகவும் அழகாகவும் கட்டப்பட்டது. சுற்றிலும் மதிலையுடைய கோநகரத்தில் இக்கோவில் அழகுற அமைந்துள்ளது.

இச்சிவன்கோவில் இராசராசனின் ஞாபகமாக "வானவன் மாதேவி ஈஸ்வர முடையார்" எனப் பெயரிடப்பட்டது. இக்கோவிலைப் பூர்த்திசெய்து வைத்தபெருமை 1-ம் இராஜேந்திரனுக்கு (கி.பி. 1012-1044) உரியது. இக்கோவிலின் புறச்சுவர்களில் 1-ம் இராஜராஜன், ஆதிராஜேந்திர சோழன், வீரராஜேந்திர சோழன் முதலியோரின் பெயர்களும், அவர்கள் இக்கோவிலுக்குச் செய்துள்ள திருப்பணிகளைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. ஸ்ரீ ஆதிராஜேந்திரதேவனல் (கி. பி. 1070) கொடுக்கப்பட்ட விளக்கைப் பரிபாலிக்க வேண்டியவர்கள் இக்கோவில் ஊழியர்கள், மேற்பார்வையாளர்கள், நட்டுவனர்கள், (கூடல் குரு) உருத்திரகணிகையர் முதலிய மகேஸ்வரர்கள் (சிவனடியார்கள்) என்றுகல் வெட்டுக்கூறுகிறது.

இக் கோவில் திராவிடச் சிற்பக்கலை மாணிக்கமாகத் திகழ்ந்தது. "கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடும் கருணைகரக்கடவுளான நடராஜ மூர்த்தியை, ஆவாகனம் பண்ணிப் பிரதிஷ்டை செய்வித்தார்கள். உமை அம்மை, பிள்ளையார், சுப்பிரமணியர், நால்வர்கள், சண்டேசுரர் முதலியோரை சுற்றுப் பிரகாரங்களில் உள்ள இடங்களில் சிறந்த வெண்கலப் படிவங்களை வைத்தனர். தஞ்சையில் நடந்ததைப்போல இங்கு ஓதுவார்கள் தேவாரங்களையும் திருவாசகத்தையும் ஓதி வந்தனர்.

1-ம் இராசராசனின் பணியாளன் "தாழி குமரன்" என்பவன் மாதோட்டத்தில் (இராசராசபுரத்தில்) அழகியகோவில் ஒன்றைக்கட்டி, இம் மன்னன் பெயரால் "இராசராசேச்சரம்" எனப் பெயரிட்டான். அதற்குப் பல தானங்கள் செய்துள்ளான். இராசராசன் தான் தஞ்சாவூரிற் கட்டிய பெரிய கோவிலுக்கு ஈழத்தில் இருந்து பணமும் இலுப்பைப்பாலும் அனுப்ப ஏற்பாடு செய்திருந்தான் (சோழர் வரலாறு - டாக்டர் மா. இராசமாணிக்கம் பக். 206).

(10-ம் பக்கம் பார்க்க)

# கலையில் ஆன்மீகம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏறக்குறைய இவரது முப்பத்தைந்தாவது பராயத்திலே அத்தியடிப்பிள்ளையார்கோவில் தேரை திறம்படச் செய்துள்ளார். நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிற்தேர், கரவெட்டி கிராயின் பிள்ளையார் தேர், கோப்பாய் வடக்கு கந்தசுவாமி கோவில் தேர், குரும்பசிட்டி அம்மாள் கோவிற்தேர் என்பன இவரது கைவண்ணத்தின் சித்திரத்தை எடுத்து விளக்குகின்றன.

புத்தூர் சிவன் கோவில், காரைதீவு முருகமூர்த்தி கோவில் ஆகியவற்றில் எல்லாம் இவரது வாகனங்கள் விளங்குகின்றன. நல்லூர் கைலாய வாகனம், கைலாய பிள்ளையார் கோவிற் கேடகம், கற்பக விநாயகர் கோவிற்கேடகம் என்பன இவரது சிற்பத்திறனல் எழுந்தவை. மலாயா போன்ற கடல்கடந்த நாடுகளிலுள்ளோரும் இவரது சிற்ப வேலைகளை விரும்பினர். அகில இலங்கையிலும் ஆங்காங்கு உள்ள சிவஸ்தலங்களில் இவரது வாகனங்கள் உள்ளன.

இவற்றில் வீரமாகாளியம்மன் கோவிலில் அமைத்த தேரே இவரது பெருமையை விஸ்தாரமாக்கியது. அக்காலத்தில் இலங்கைக் கவர்னராக விளங்கிய சேர். அன்ரு கல்டிக்கொற் என்பவரை திரு. முதலியசிங்கம் என்பவர் அழைத்து வந்து வீரமாகாளியம்மன் கோவிற் தேரைக் காட்டினர். அக்காலை இவர் பாயும் சிங்கம் ஒன்றை கவர்னருக்கு வழங்கினர். அதனைச் சிலாகித்து கவர்னர் ஒரு பாராட்டுப் பத்திரம் வழங்கினர்.

சேர் பொன். இராமநாதன் போன்ற மேதைகளும் இவரது கலைநுட்பத்தைப் பாராட்டியுள்ளனர். பழைமையிலே கால்கொண்டு புதுமையைச் செய்பவனே கலைஞன். இந்த உண்மை இவரிடம் மிளிர்ந்தது சாஸ்திரிக ரீதியான முறைகளிற் பிறழாது புதுமையைக் கையாண்டு வாகனங்கள் செய்வதில் முன்மாதிரியாக விளங்கினர். வழக்கமாக கோவில் வாகனங்களாக தனிக் குதிரை தனிச் சிங்கங்களே இடம்பெற்றன சோடிச் சிங்கம், சோடிக்குதிரை என்பவற்றைச் செய்வதின் மூலம் வாகனங்களில் முதலில் புதுமையை புகுத்தியவர் இவர்.

தனிமலரையே வாகனமாக ஆக்கியிருக்கிருர். தன்னிலே சுழலும் சூரனைச் சிற்ப சாஸ்திர வரன் முறைக்கமையச் சிருஷ்டித்துள்ளார். இணுவில் சிவகாமி அம்மன் கோவிலில் இதனைக் காணலாம்.

வாழ்நாள் பூராவும் தன்னுடைய கடமையாக கலைகளைப் பேணிவந்த இவரிடம் சாஸ்திரரீதியான அறிவும், நம்பிக்கையுமே சிறந்து காணப்பட்டன. ஒரு சமயம் ஒருவர் "கோவில் தேர்களில் புதுமையைச் செய்யக்கூடாதா?" என்று கேட்டார். அதற்கு இவர் கொடுத்த பதில் வருமாறு: தேர் சம்பந்தப்பட்ட வரையில் புதுமையைச் செய்யக்கூடாது. அது முடியக்கூடியதுமல்ல. மூலஸ்தானம், அதன் அளவு, பிரமாணங்களென வரையறையுண்டு. ஒவ்வொரு சுவாமிக்கும் ஒவவோர் அமைப்புக்கொண்ட தேர்கள் அமைப்பது வழக்கம். இதனை நமது கற்பன சக்திக்கு ஏற்ப மாற்றக்கூடாது."

இதிலிருந்து இவரது சாஸ்திர நம்பிக்கை, கருத்தோட்டம் என்பன பெறப்படுகிறது. தனது மைந்தர்களை இத்துறையில் சிறந்து விளங்குவதற்குகந்த பயிற்சி அளித்திருக்கிருர். சாஸ்திரிக முறையில் பிறழாத பயிற்சியை இவர் ஊட்டியுள்ளார்.

திரு. ஆறுமுகம், தனது மூத்தமகன் (திரு. தம்பித்துரை) 'கிளரிக்கல்' பரீட்சையில் சித்தியடைந்து வெளியூருக்குச் செல்வதைத் தடுத்தார் காரணம் தமது பரம்பரையான கலைஅறிவு மங்கிவிடக்கூடாதென்ற பெருநோக்கமாகும். திரு. தம்பித்துரை அவர்கள் தற்போது ஆசிரியராகக் கடமைபுரிபவரானலும் தந்தையாரின் அடியொற்றி, பாரம்பரிய பெருமைக்குரிய தான கலைத்துறையை நிலைநிறுத்துவதற்குத்தக்க வாரிசாக விளங்குகின்ருர். தனது கடமை முடிவுற்றவேளைகளில் தந்தையாரின் மனத்துக்கிசைந்த கலைப்பணியில் முற்று முழுதாக இவர் ஈடுபட்டுவருகின்ருர் ஏனைய மைந்தர்களும் இந்தத் தொழிலில் தீவிரமாக ஈடுபட்டு தந்தைக்கு ஏற்ற மைந்தர்களாகவே விளங்குகின்றனர்.

கலைப்பணியே தன் வாழ்வின் மூச்சாக—பழைய பாரம்பரியத்தின் தொடர்புச் சங்கிலியாக விளங்கிய திரு. ஆறுமுகம் அவர்கள் பிரிவு கலைதேவிக்கு ஈடுசெய்ய முடியாத நட்டமாகினும், அவர் ஏற்றிவைத்த கலைத்தீபம் காலமெல்லாம் சுடர்விட்டுப் பிரகாசிக்கக் கூடிய பணியைச் செய்துவைத்திருக்கின்ருர்.

இன்று சமயத்தோடுதொடர்புள்ள ஸ்தாபனங்களும், சங்கங்களும், பிரமுகர்களும் எமது பாரம்பரிய கலைப் பொக்கிஷங்களைப் பேணுவதற்கு சிற்பாசாரியர் ஆறுமுகம் அவர்களின் குல விளக்குகளுக்குத் துணைசெய்ய வேண்டுவது கடனகும். அப்போதுதான் நமது பாரம்பரிய கலைச் செல்வம் காலத்தை எதிர் நீச்சலடித்து சிறந்து வளரும்.

(சிற்பாசாரியர் ஆறுமுகம் அமரத்துவம் எய்திய 16-வது தினம் சென்றவாரம் கொண்டாடப்பெற்றது.)

# 'மக்களிலே தேவனுகப்பிறந்து வாழ்ந்தவனின் செய்தியே இராமாயணம்'

## கம்பன் விழா மாலை நிகழ்ச்சியில் வித்துவான் பொன். முத்துக்குமாரன் உரை

யாழ்ப்பாணம், ஞாயிறு

"மக்களிலே தேவனுகப் பிறந்து வாழ்ந்தவனின் செய்தியே இராமாயண மாகும். அதனைப்படிப்போரும், சிந்திப்போரும், சிந்தித்துநடப்போரும், வள்ளுவர் கூறியவாறு மக்களுள் ஒருவரேயெனினும் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்."

இவ்வாறு வித்துவான் பொன். முத்துக்குமாரன் நேற்று வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் இலங்கை கம்பன் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற 'கம்பன் விழா' வின் மாலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்துமையில் குறிப்பிட்டார்.

வித்துவான் பொன். முத்துக்குமாரன் தமது தலைமையுரையில் தொடர்ந்து கூறியதாவது:–

ஒரு மரமானது செழித்து வளர்கின்றது. செழுமையாய் வளர்ந்த அம்மரம் தீஞ்சுவை மிக்க கனிகளை உலகிற்கு அளிக்கின்றது. மக்கட் சமுதாயத்தையும் ஒரு மரத்திற்கு ஒப்பிடலாம். செழுமையான மரம் தனது செழுமையின் பயனாக தித்திக்கும் நறுங்கனிகளைத் தருதல் போல வளம் நிறைந்த வாழ்வு நடத்தும் சமுதாயம் தனது மாண்பு மிக்க வாழ்வின் பயனாக அழியாச் சிறப்புடைய இலக்கியத்தை உலகிற்கு அளிக்கின்றது.

நமது தமிழ்ச் சமுதாயம் பண்டைக்காலத்தில் அவ்வப்போது மேன்மை மிக்க வாழ்வு கண்டது. அவ்வாழ்வின் பயனாக விழுமிய பேரிலக்கியங்கள் அவ்வக்காலத்தில் தோன்றலாயின. தமிழ்நாடு எக்காலத்திலும் கண்டிராத ஓர் ஏற்றமான வாழ்வினை இடைக்காலச் சோழப் பெருமன்னர் காலத்திற் பெற்றிருந்தது. அக்கால மக்கள் நடத்திய அற்புதமான வாழ்வின் படப்பிடிப்பாக எழுந்த காப்பியமே கம்பர் இயற்றிய இராமாயணமாகும். இவ்விராமாயணம் தோன்றுவதற்கு முன்னே மிகப் பழங்காலத்தில் சங்கநூல்களென்று கூறப்படும் அகநானூறு, புறநானூறு போன்ற எட்டுத்தொகை நூல்கள் தோன்றின. அவற்றின் பின்னர் சேரர்குலத்தவராகிய இளங்கோ அடிகள் செய்த சிலப்பதிகாரம் தோன்றியது. பின்னர் பல்லாண்டுகள் கழிந்து திருத்தக்கதேவர் சிந்தாமணியைத் தந்து புகழ் பெற்றார். இவ்வாறு முன்னே தோன்றிய நன்னூல்கள் எல்லாவற்றிலும் தன்னேர் இன்றி தமிழ்மொழிக்குத்தனிப் புகழ் தரும் நூலாய் விளங்குவது கம்பர் பாடிய இராமாயணமாகும்.

### பெருமை குன்ருது இலங்குகின்றது

இராமாயணத்தினைப் போலவே இராமாயணத்தின் கதாநாயகனாகிய இராமபிரானும் ஏனைய காப்பியத்தலைவர்கள் எல்லாரினும் நல்லவனாய் புதியரிற் புதியனாய், சீரியரிற் சீரியனாய்த் திகழ்கின்றான். அவனிடத்திற் காணப்படும் உத்தம பண்புகளில் ஒன்றினை மட்டும் உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம் இராமாயணத்திற்கு முன்னே தோன்றிய காப்பியங்களிலும் தமிழ்ச்சுவை நிரம்பிய சங்க நூல்களிலும் காணப்படும் இலக்கிய புருஷர்களிடத்தில் இல்லாத ஒரு பெரும் பண்பினை — உயரிய பண்பினை இந்த இராமன் இயல்பாக உடையவனாக இருக்கின்றான். சங்க இலக்கியங்களிற் காணப்படும் கிழவித்தலைவர்கள் பரத்தையர் காரணமாகப் பிரிந்தனர் என அப்பாடல்கள் பறைசாற்றுகின்றன. திருத்தக்க தேவர் சிறப்பித்துப் பேசிய சீவகனும் மனைவியர் பலரை மணந்து மகிழ்ந்தவன், ஆயின் கம்பன் புனைந்த காப்பியத்திற் காணும் இராமனே "இந்த இப்பிறவிக்கு இருமாதரை சிந்தையாலும் தொடேன்" என்ற சீரிய கொள்கையுடையவன். வள்ளுவர் பெருமான் இல்வாழ்வானுக்கென வகுத்துக்கூறிய இலக்கணங்களில் ஒன்று 'பிறன்மனை விழையாமை' என்பது அவர் அரசனைப் பற்றிக் கூறுமிடத்து ஆகாதென விலக்கப்பட்டவற்றுள் ஒன்று வரைவின் மகளிரை அணைதல் என்பதாகும். இவ்வாறு வள்ளுவர் பெருமான் தனிமனிதனிடத்திலும் சமூகத்திலும் அரசனிடத்திலும் அமையவேண்டிய அரிய பண்புகள் எவையெனக் கருதினரோ அவற்றைக் கம்பர் வாழ்ந்த காலத்துச் சமுதாயம் கைக்கொண்டு சிறப்புற்று விளங்கியது. அதன் பயனாகவே தான் கம்பராமாயணம் வள்ளுவர் வாக்கிற்கு வாய்த்த உரை விளக்கமாய் தனக்கு முன்னே தோன்றிய காப்பியங்களுக்கெல்லாம் தலைமையானதாய் என்றும் பெருமைகுன்ருது இலங்குகின்றது.

### கதாபாத்திரங்கள் சிறப்பு

கம்பராமாயணத்தில் காணப்படுவோர் எல்லோரும் ஒரே குலத்தினருமல்ல; ஒரே தரத்தினருமல்ல. அரச குலத்தினர், அரக்க குலத்தினர், வேட்டுவ குலத்தினர், காட்டில் வாழும் குரங்குகள் எனப் பலரும் காணப்படுகின்றனர். அது மாத்திரமன்றி பிறப்பினாலும், சிறப்பினாலும் வேறு, வேறு நன்மை உடையவராய் இவர்களிடை நாம் எதிர்பாராத வியக்கத்தக்க இயல்புகளும் விளைவுகளும் உள்ளமையக் கம்பர் அழகாக எடுத்துக் காட்டுகின்ருர். மன்னவர் என்ருல் உயர்ந்தவர் என்றும் இராக்கதர் என்ருல் இழிந்தவர் என்றும் வேடர்கள் என்ருல் வெறுக்கத்தக்கவர் என்றும் ஆடவர் என்ருல் ஆற்றல் உடையவர் என்றும், பெண்கள் என்ருல் பேதையர் என்றும் நாட்டிலுள்ளவர்கள் தாம் நகரிகமுடையவர்கள் என்றும் காட்டிலுள்ளவர்கள் ஒழுக்கம் என்ற ஒன்றைகேட்டும் அறியாதவர் என்றும் சாதாரணமான மக்கள் கருதுவர். இராமாயணமோ அவ்வாறு கூறவில்லை. அரண்மனையிலுள்ள ஒருத்தி அருளும் அன்பும் துறந்த அரக்கியாய் கதை முழுமைக்குமே காரணமாகின்ருள். அரக்கியருள் ஒருத்தியோ அன்பும் அருளும் பண்பும் பொருந்தி கலங்கி மெலிவோர்க்குக் கண்ணைய் உதவுகின்ருள். கல்வியும், ஞானமும், செல்வமும் செம்மைமை தகைமையும் உடைய ஒருவன் தீயவழியிலே சென்று தானும் அழிந்து தன் குல நாசத்திற்கும் காரணமாகின்ருன். ஆனுல் கல்வியோ, ஞானமோ இல்லாத காட்டில் வாழ்ந்த வேட்டுவன் ஒருவனே திருமாலின் மெய்யடியார்களில் ஒருவனுய்ச் சேவிக்கப்படும் சிறப்பெய்துகின்ருன்.

ஆகவே இராமாயணத்தில் காணப்படும் கதாபாத்திரங்கள் நமக்கு ஒரு நல்லறிவு புகட்டுகின்றன. அந்த நல்லறிவு என்ன?

தக்க இன்ன தகாதன
இன்னவென்று
ஒக்க உன்னலராயின்
உயர்ந்துள
மக்களும் விலங்கே
மனுவின்னெறி
புக்கவேல் அவ்விலங்கும்
புத்தேளிரே.

இதை நோக்கும் போது தொல்காப்பியர் சொல்லாத ஒரு பாகுபாட்டினை நாம் புதிதாக இங்கு காண்கின்ஞேம். மக்களாய்ப் பிறந்தவர்களில் மக்களென்று கருதப்படத்தக்கவர்களும் உண்டு. மிருகங்களும் உண்டு. மக்களென்று கருதப்படத்தக்கவர்கள் பகுத்தறிவுடையவர்கள். மக்களிலே மிருகங்களென்று கருதப்படத்தக்கவர்கள், அப்பகுத்தறிவு இல்லாதவர்கள். இதுவே தொல்காப்பியர் சொலலிய பாகுபாடு. இராமாயணம் அவ்வாறன்றி மக்களாய்ப் பிறந்தவர்களில் விலங்குகளும் இருக்கின்ருர்கள், மக்களும் இருக்கின்ருர்கள், தேவர்களும் இருக்கின்ருர்களென்று தீர்க்கமாகக் கூறுகின்றது, மக்களிலே தேவனுகப் பிறந்து வாழ்ந்தவனின் செய்தியே இராமாயணமாகும். அதனைப் படிப்போரும், சிந்திப்போரும். சிந்தித்து நடப்போரும் வள்ளுவர் கூறியவாறு மக்களுள் ஒருவரேயெனினும் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்.

## சுவாமி விவேகானந்தர்

வித்யாரத்னம், நவாலியூர்
— சோ. நடராசன் —

இராகம்: மோகனம், தாளம்: ஆதி.

பல்லவி

ஞானந் தழைக்கச் செய்
தானே - சமரச
ஞானந் தழைக்கச்
செய்தானே.

அனுபல்லவி

தானந்த மில்லாப்பர
மானந்தசோதி விவே
கானந்த கேசரி
அவனியுய்ந்திட வந்தே
(ஞானம்)

சரணம்

தானந் தவங்களெல்லாம்
தன்னுயிர்போல் மன்னு
யிரைப்
பேணுந் திறங்களென்றே
பெரிய பொருளைச்
சொல்லி
மோனங் கடந்தபொருள்
முத்தியளிக்குந் தெய்வ
ஆனந்த வாரிதியை
அடைய வழிவகுத்தே
(ஞானம்)

# ஸான் பிரான்சிஸ்கோ நகரில் அம்மன் சிலை

## பழமையான அரிய இந்திய சிற்பங்கள்

பழமையான இந்திய நாட்டுச் சிற்பங்கள் பல கொண்ட ஒரு கவர்ச்சியான தொகுப்பு சன் பிரான்சிஸ்கோ கோல்டன் கேட் பூங்காவிலுள்ள டி யங் நினைவு அரும்பொருள் களஞ்சியத்தில் காட்சியில் இடம்பெற்றிருக்கிறது. 5000 ஆண்டுக்கால இந்தியக் கலைப் பொருள்களைக் காட்டும் இந்தக்காட்சி மே 29 முதல் ஜூலை 19 முடிய நடைபெறுகிறது.

இந்திய அரும்பொருள் களஞ்சியங்களும், இந்தியப் புதை பொருள் இலாகாவும் இரவல் கொடுத்துள்ள இத் தொகுப்பில் கல், சுட்ட மண் ஆகியவற்றில் உருவாக்கப்பட்ட நூறு சிற்பங்களுக்கு மேல் இருக்கின்றன. மேற்கு உலகில் இவை காட்சியில் வைக்கப்படுவது இதுவே முதல் தடவை.

விலை மதிக்கவொண்ணுத இந்தச் சிற்பங்களின் எடை 30 டன்; டோக்கியோ தேசிய அரும் பொருள் களஞ்சியத்தில் காட்சியில் வைப்பதற்காக இவை முதலில் ஒன்ருகத் தொகுக்கப்பட்டன. டி யங் நினைவு அரும்பொருள் களஞ்சியத்தில் 'இந்தியச் சிற்பக் காட்சி முடிவடைந்த பின், இவை ஸியாட்டில், கிளிவ்லண்ட், நியூயார்க்மெட்ரோபாலிட்டன் அரும் பொருள் களஞ்சியங்களிலும், ஹொனலூலு கலைக் கழகத்திலும் காட்சியில் வைக்கப்படும்.

### சில அரிய சிற்பங்கள்

கிறிஸ்து பிறப்பதற்கு 2500 ஆண்டுகளுக்கு முந்தியவை என்று கருதப்படும் பழமையான அரியகலைப் பொருள்கள் சிலவும் காட்சியில் உள்ளன.

இவற்றின் தொகை 8. இவை மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் கிடைத்தவை. இவற்றில் சில வருமாறு: குட்டைக் கொம்புகள் உள்ள வெண்கல எருமை, சுட்ட களிமண்ணில் செய்த - இடுப்பளவு உள்ள அம்மன் சிலை (தேவி முத்துமாலையும் விசிறி போன்ற கிரீடமும் அணிந்திருக்கிருள்) தலையின் இருபுறமும் ஒரு அணி அலங்கரிக்கிறது. - இவை இரண்டும் மொகஞ்சதாரோ சிற்பங்கள். ஒற்றைக கொம்புள்ள ஒரு மிருகம் பலி பீடத்தைக் காக்கும் சதுரமான செதுக்கு முத்திரை ஒன்று - இதில் மேல் பகுதியில் எட்டு மறை பொருள் படங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. வாலைத் தூக்கிக் கொண்டு குந்தியபடி உட்கார்ந்து முன்னங்கால்களில் ஏதோ ஒரு பழத்தைக் கொறித்துக் கொண்டிருக்கும் அணில் ஒன்று. மண்ணில் செய்த ஒரு அழகுப் பொருள். - இவை மூன்றும் ஹரப்பாவில் கிடைத்தவை.

பரத ஸ்தூபத்தின் வேலியில் ஒரு பகுதி, இதில் மூன்று தூண்களும், ஆறு குறுக்குச் சட்டங்களும் இருக்கின்றன, கிறிஸ்து பிறப்பதற்கு இரு நூற்ருண்டுகளுக்கு முந்தியது. இது. சாஞ்சி பெரிய ஸ்தூபத்தின் தெற்கு வாயலின் மேற்குத் தூணின் ஒரு சிறு பகுதி. கல்லில் செதுக்கிய இது, கிறிஸ்து பிறப்பதற்கு நூருண்டு முந்தியது. வலப்புற முகப்பில் ஒரு வாயில் காப்போனின் கால்கள் தெரிகின்றன. இடப்புறத்தில் அசைவதுபோன்று தோன்றும் ஒரு செடியும் கொடிகளும், பறவைகளும், பழமும் காட்சியளிக்கின்றன, ஒரு யக்ஷன் உருவமும் தெரிகிறது.

சுட்ட மண்ணில் செய்த கருமை நிற அம்மன்சிலை ஒன்று; அழகிய நகைகள் பல அணிந்துள்ளது போலத் தோன்றும் இந்தச் சிலை வட மதுரையில் கிடைத்தது கிறிஸ்து பிறப்பதற்கு 200 முதல் 400 ஆண்டுகள் முந்திய காலத்தைச் சேர்ந்தது. முழங் கால்களில் கைகளை ஊன்றி உட்கார்ந்திருக்கும் சுட்ட மண்ணில் செய்த சிவப்பு யக்ஷன் சிலை ஒன்று; உள்ளே கூழலாக இருக்கும் இது, கிறிஸ்து பிறப்பதற்கு 200 ஆண்டுகள் முந்திய சங்க காலத்தைச் சேர்ந்தது. உரிய வேலைப்பாடுகள் அமைந்த கிரீடமும் மற்ற அணிகலன்களும் அணிந்திருக்கிருன் இந்த யக்ஷன்.

களிமண்ணுல் செய்த செந்நிற பொம்மை ரதம் ஒன்று; இதுவும் சங்க காலத்தைச் சேர்ந்தது. நான்கு சேணம் பூட்டிய காளைகள் தயாராக இருக்கின்றன. இருபுறமும் உள்ள துவாரங்களில் அமைக்கப்பட்டுள்ள அச்சாணிகளில் இரு சக்கரங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. ரதத்தின் முன்புறத்தில் ஒரு ஏர்க்கால் இருக்கிறது.

### சாரநாத் சிற்பங்கள்

குப்தர் காலத்தைச் சேர்ந்த, நிற்கும் புத்தர் கற்சிலை ஒன்றிருக்கிறது. இது கி. பி. 550 ஆண்டை ஒட்டியது, பித்தளை நிறத்தில் இருக்கிறது. காத்துப் பரிபாலிக்கும் பாவனையில் புத்தர் காட்சியளிக்கிருர். இதுவும் வட மதுரையில் கிடைத்த சிலை. ஐந்து மடிப்பாக மேல் துணி ஒன்றைப் புத்தர் போர்த்திருக்கிருர். அவர் உடம்பு வெளியில் தெரிவது போன்ற மெல்லிய மேல் துணியைப் போர்த்திருப்பதாகக் கலைஞர் படைத்திருக்கிருர் சாரநாத் சிற்பங்கள் பலவற்றில் போர் வீரர் ஒருவன் சிங்கத்தின் மீது அமர்ந்திருப்பது போன்ற கல்லில் செதுக்கிய சிலை ஒன்றிருக்கிறது. கி. பி. ஐந்து, ஆருவது நூற்ருண்டுகளைச் சேர்ந்தது இது.

டி யங் அரும் பொருள் களஞ்சியத்தில் காட்சியில் வைக்கப்படும் இந்தியக் கலைப் பொருள்களில்85 ஓவியங்களும் இருக்கின்றன. 17 முதல் 19வது நூற்ருண்டின் ஆரம்பம் வரையுள்ள காலத்தைச் சேர்ந்த இவை, ராஜபுத்திர, மொகலாய ஓவியங்களாகும்.

# அதிசயம் ஆனல் உண்மை

டோக்கியோ, ஜூன் 27

மோட்டார் விபத்தொன்றில் சிக்கிக் காயமுற்ற பெண் கடந்த ஒரு மாதகாலமாக மயக்கமுற்ற நிலையில் இருக்கிருர். இரண்டு மாத காலத்துக்கு முன்னர் அருக்கு ஒரு குழந்தை பிறந்ததுகூட அவருக்குத் தெரியாதென்பதும், இன்னும் மயக்கம் தெளியவில்லை என்பதும் பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது.

மாசாகோ நானகா என்ற இவ் இருபத்து நாலுவயதுப் பெண் கடந்த அகடோபர் மாதம் விபத்தில் காயமுற்று. உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தும் டாக்டர்களின் திறமையால் ஆப்ரேஷன் மூலம் உயிர் பிழைத்துக்கொண்டார்.

சென்ற ஏப்ரல் மாதம் இவருக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. சுயநினைவு இல்லாதிருந்த போதிலும்,இப்பெண் தன் குழந்தையை அணைத்துப் பாலூட்டினுளாம்! இம்மாத ஆரம்பத்தில் இக்குழந்தை பராமரிப்பு இல்லமொன்றில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தொடர் கதை

# யாத்திரிகன்

"நீலாம்பரி"

ரயில் நிலையத்திலிருந்து சற்றுத்தூரம் கடந்துபோன பின் ஒருக்கால் நின்று திரும்பிப்பார்த்தேன். வைத்தியின் வண்டி சலீர் சலீர் என்று சலங்கை ஒலியுடன் பின்னல் வந்துகொண்டிருந்தது. வண்டி என்னைத் தாண்டிப்போன போது கொழும்பு பயணகாரர் இருபேர் அவன் வண்டியில் இருந்ததைப் பார்த்தேன். அவர்கள் வேறு யாருமல்ல, என்னேடு ரயிலில்கூட பயணம் செய்துவந்த தந்தையும் மகளும்தான்.

பட்டத்துக் குதிரையின் கடிவானம் பிடித்து அதன் மீது ஆரோகணித்திருக்கும் இராசகுமாரனின் கம்பீரத்துடன் வண்டித்தட்டின் முன்பக்க விளிம்பில் உட்கார்ந்து இருகால்களையும் ஏர்க்காலின் இருபக்கச் சட்டத்திலும் எறிந்து போட்டு அதில் ஊன்றி உதைத்து தாக்குப்பிடித்துக்கொண்டு ஒரு கையில் நாணகக் கயிறும் மறுகையில் துவரங்கம்புமாக நேரிய நோக்குடனிருந்து வைத்தி மாட்டை விரட்டியகாட்சி கண்கொள்ளாக்காட்சியாயிருந்தது. அப்பொழுது அவனைக் கையால் பிடிக்க முடியாது. கயிறு எறிந்தும் பிடிக்கமுடியாது. வில்லிலிருந்துபுறப்பட்ட அம்பைப்போல ஒற்றைத்திருக்கல் கரகரென்று உருண்டோடி பார்வையிலிருந்து மறைந்து போயிற்று. கையிலிருந்த துவரங்கம்பு ஒரு மந்திரக்கோலாக மட்டும் திடீரென மாறிவிடுமேயானல் தன் பூச்சியத்தை அதே வேகத்தில் ஆகாய வீதிக்கே எழுப்பிவிடமாட்டானு அவன்?

உலக ஜீவகோடிகள் அனைத்தினதும் பசிப்பிணி போக்க பூமியைக் கிண்டும் ஏர்முனைக்குப் படைத்த நாலுகால் என்று மற்றவர்கள் மதிக்க வேண்டுமெனக் கருதியோ என்னவோ மாடுகளில் ஒன்றுக்கு 'ஏர்க்காலி' என்று அருமையாகப் பெயர் சூட்டியிருக்கிருன். ஒரோர் சமயங்களில் தெருவில் அது மெது நடை போடத் தொடங்கியபோது 'என்ன வைத்தி' ஏர்க்காலிக்கு தோட்டத்து நினைவு வந்துவிட்டதோ?" என்று யாராவது பரிகாசம் பண்ணிஞல் அவனுக்குச் 'சுருக்'கென்று கோபம் வந்துவிடும். நமது முதுகில் போட்டாற்போல மாட்டின் முதுகில் சளீர் என்று துவரங்கம்பால் இரண்டு வீச்சு ஓங்கிப்போட்டு அதை முடுக்கிவிட்டு "அதைப்பற்றி உங்களுக்கெல்லாம் என்ன தெரியும், அளவெட்டி சவாரிரேட்டில் கொடிகட்டி எழுப்பிவிட்டு அங்கிருந்து நேரே என் மக்களின் தோட்டத்துக்குவந்து சூத்திரம் வளைத்து வயல் உழுது பிறகு இப்போ நாலு வருசமாய் திருக்கல் ஓடுது. தெரு உழுகிற மாடுகளும் வேறே இருக்கு. ஆனல் ஒருக்கால் கீழே இறங்கி இத்தனை வருசத்துககுப் பிறகும் குலையாமலிருக்கும் இதன் நடையின் சீர்த்தியை உம்முடைய கண்ணலே பாருமன். பிறகு சொல்லுமன்" என்று சுடச்சுட அப்பொழுது அவன் திருப்பிக் கொடுக்கிருன். பாதிவழியில் வண்டியைவட்டுக் கீழே இறங்க நமக்குத் துணிவில்லை. அதனல் வாயைமூடிக்கொண்டு பேசாமலே இருந்து விடுகிறோம்.

வைத்தி வண்டியுடனே பார்வையிலிருந்து மறைந்துபோய்விட்டான். எப்படியும் ஒரு நாள் அவனைச் சந்தித்துப் பேசவேண்டுமென்று என் மனம் எண்ணமிட்டுக்கொண்டது. அவனது ஊர் எங்கள் ஊருக்கு அடுத்த ஊர்தான். அவன் ஊர்மட்டுமென்ன, சிற்றம்பலத்தின் தாய் தகப்பன் வசிக்கும் ஊர், வேலாயுதம் இருந்து படித்து ஆளான ஊர் எல்லாமே கீரிமலையைச்சுற்றி கிழக்கு, தெற்கு, மேற்காக ஓர் எட்டு அல்லது ஒன்பது மைல் சுற்று வட்டத்துககுள் அமைந்துள்ள கிராமங்கள்தாம். பட்டணத்து நாகரிக வேகத்தாக்குதலுக்குள்ளாகி கிராமத்திலுள்ளவர்கள் அடுத்தவீட்டுக்கே எல்லைமறைப்பு போட்டுக்கொண்டு கற்சுவரும் மதிலுமாய் வீட்டைச்சுற்றி கோட்டை கட்டி எழுப்பி வாழ முற்பட்டிருக்கும்போது அடுத்த கிராமம் என்பது பெரும்பாலும் நம்வீட்டு ரேடியோவும் பத்திரிகையும் வர்ணிக்கும் மற்றெரு உலககண்டமாக அல்லவோ எட்டிப்போய் தலைக்குள்ளேமட்டும் நின்று சுழன்று ஜீரணித்துவிடும் சங்கதியாகிவருகிறது.

யாத்திரை முடிவில் உண்டாயிருந்த மனச்சோர்வு சிறிது அகன்று கால்கள் விறுவிறுப்பாக நடைபோட்டன. எனக்கு முன்னல் ஒரு கூப்பிடு தொலைவில் போய்க்கொண்டிருந்த பாட்டாவை இரண்டே எட்டில் அணுகினேன்.

"உற்றேமே யாவோம்
உனக்கே நாம்ஆட்செய்வோம்
மற்றை நங்காமங்கள் மாற்று"

என்ற ஆண்டாள் பாடலை அவர் பாடிக்கொண்டே நடந்தார். யாத்திரையின் தொடக்கம், முடிவு இரண்டும் அவருக்கு ஒன்றுகத்தானிருந்தன. யாத்திரை தொடங்கிய அன்று விடியற்காலை நாமார்க்குங் குடியல்லோம் என்று பாடிக்கொண்டு எத்தனை உற்சாகமாக வழி நடந்தாரோ அதேபோல இப்பொழுதும் அவர் மனநிறைவுடன் ரீங்காரம் செய்தவாறே காணப்பட்டார். ஆனந்தமான பேரின்பத் தேனைப் பருகிய மதுகரத்துக்கு துயர் ஏது? சோர்வு ஏது?

ஃ ஃ ஃ

சுவாமியார் கூறியவாறு வேலாயுதம் மூன்று தினங்களின் பின் எங்களைச் சந்தித்தான். சிற்றம்பலத்தின் தகப்பன் தாய்க்குத்துணையாகவந்த தாயும் அவர்கள் எங்கள் இருபேரையும் வீட்டுக்குக் கூட்டி வரும்படி மிகவும் வற்புறுத்தி வேண்டிக்கொண்டதாயும் சொன்னன். ஆகவே, ஒருநாள் வேலாயுதத்தோடு கூட அவர்கள் கிராமத்துக்குப்போய் ஒரு பகல் தங்கி மாலை திரும்பினேம். அன்றையதினமே சுவாமியார் முன்புவாக்களித்திருந்தபடி கிழவனுக்கு ஆடாதோடைச் சூரணம் போட்டுக் கொடுத்துவிட்டார். கிழவனும் மற்றவர்களும் எங்களைத்திரும்பிப் போகவே விடமாட்டோம் என்று பிடிவாதம் பிடித்தார்கள். இன்னேர் தடவை வருகிறோம் என்று சொல்லிக்கொண்டு எப்படியோ மீண்டோம். வேலாயுதம் கொழும்புக்குப் பயணமாவதற்குள்ளாக மேலும் இரண்டு நாள் வந்து எங்களுடன் தங்கினன். "புதுச்சோடி இங்கு வந்து சிலநாள் கீரிமலையில் தங்கிப்போகலாமே" என்று சுவாமியார் அவனிடம்கூறியபோது "அவர்கள் எந்தச் சமயத்திலும் புறப்பட்டுவரும் பக்குவத்தில்தானிருக்கிருர்கள். உங்களிருபேரைப்பற்றியும் பேசாத நாளே கிடையாது" என்றுன் வேலாயுதம்.

வேலாயுதம் கொழும்புக்குப் பயணமாகிய மறுநாள் மாலை கடற்கரையில் நாமிருபேரும் பேசிக் கொண்டிருந்த போது "நீர் மெதுவாக எங்கேயும் ஒரு வேலை பார்த்துத்தேடிக்கொண்டாலென்ன?" என்றுர் பாட்டா. அதற்கு நான் சிரித்துவிட்டு மேலே எதுவும் பேசாமலிருந்தேன்.

"வேடிக்கைப் பேச்சல்ல காணும். மெய்யாகச் சொல்கிறேன்."

"நான் வேலையில்தானிருக்கிறேனே, பாட்டா. எனக்குள்ள ஒரு மாத விடுமுறையில் தானே இத்தனை நாளும் உங்களோடு சுற்றித் திரிந்தேன்"

சமுத்திரத்தை நோக்கிக்கொண்டிருந்த பாட்டா நான் இவ்வாறு கூறிய மாத்திரத்தே சட்டெனத் திரும்பி என்னை நோக்கி உட்கார்ந்து "மெய்யாகச் சொல்கிறீரா? ஆனல் இத்தனை நாளும் என்னிடம் ஒன்றுமே பேசாமல் மறைத்துவிட்டீரே.நீர் சரியான ஆள். எங்கே என்ன வேலை பார்க்கிறீர்?" என்று வியப்போடுகேட்டார்.

"ஒரு பத்திரிகைக் கந்தோரில் வேலைபார்த்துவருகிறேன் பாட்டா. அங்கு வேலைபார்க்கத் தொடங்கி இப்போ ஐந்து ஆண்டுகள் மட்டிலாகிறது" என்றேன்.

"பின்னே. அப்பிடிச்சொல்லுமன் சங்கதியை. நான் பல தடவை நினைத்தேன், இப்படியெல்லாம் சண்டப்பிரசண்டமாய்ப் பேசுகிறேரே, இந்தப் பிள்ளை வேலை வெட்டி ஏதாவது பார்க்குதோ அல்லது வீண்பொழுது போக்குதோ முருகா என்று அப்பவும் முருகனைத்தான் நினைத்தேன். இப்ப எனக்கு எவ்வளவோ சந்தோஷம். பத்திரிகைக் கந்தோர் என்ருல் அது உலகளந்த பெ மாள் கோயில் அல்லோ. உலகத்தைக் கரைகண்ட தோரணையில் என்னேடு ஏட்டிக்குப்போட்டியாக வாக்குவாதப் பட்டதின் உள்ளமை எல்லாம் இப்பவல்லவோ தெரிகிறது. எழுந்திடும் மாப்பிள்ளை" — என் கையைப் பற்றித் தூக்கி கடற்கரை மணலில் வந்து மோதிய அலைகளைப் போல ஓகோ என ஆர்ப்பரித்து நின்ருர் சுவாமியார்.

(தொடரும்)

# சிறுவர் பூங்கா

## நேரு நல்ல மாமா

— வித்துவான் சி. ஆறுமுகம் —

நேரு நல்ல மாமா! - தனக்கு
நிகரில் லாத மாமா!
ஊருக் குழைத்த மாமா! - என்றும்
உண்மை யுள்ள மாமா!

அன்பு வார்த்தை யாடி - உலகை
அணைத்து வாழ்ந்த மாமா!
இன்பம் எங்கும் பொங்க - என்றும்
ஏழ்மை தீர்த்த மாமா!

காந்தித் தாத்தா வழியில் – உலகைக்
காத்து வாழ்ந்த மாமா!
சாந்தி எங்கும் ஓங்க - உலகைத்
தாங்கி நின்ற மாமா!

பேச்சில் வீரன் மாமா! - செயல்கள்
பேணி முடித்த மாமா!
மூச்சு முடியும் வரைக்கும் – நன்கு
முயன்று ழுழைத்த மாமா!

நேரு நல்ல மாமா! - ஐயோ!
நேற்றிருந்தார் மாமா!
பாருக்குழைத்தார் மாமா! - எங்கோ
பறந்து மறைந்தார் மாமா?

நேரு மாமா போல - எங்கும்
நீதி செய்வார் யாரோ?
நேரு மாமா போல - நல்லோர்
நிறையத் தோற்ற வேண்டும்!

குழந்தை யுள்ளங் கொண்டு - எங்கும்
கூடி யாடும் மாமா!
இழந்து விட்டோம் மாமா! – நின்னை
என்று காண்போம் மாமா!

இந்தக்கோடை காலத்திலே...

## மாம்பழம் சாப்பிடுகிறீர்களா?

—ஆசீர்வாதம் வென்சஸ்லாஸ்—

நமது இல்லங்களிலும், விருந்துகளிலும், உணவுச்சாலைகளிலும் பரிமாறப்படும் உணவுகளில் கனிகள் இடம்பெறுவது அபூர்வமாக இருக்கின்றது. பொதுவாக நாம் கனிகளை ஏதோ ஆசைப் பொருள்கள் எனவும், ஒருமுறை ஆசைதீரத் தின்றுவிட்டால் போதுமெனவும் கருதுவதுமுண்டு. இது தவறு. மக்கள் உணவில் கனிகளுக்கு அதிகஇடம் கொடுக்க வேண்டும். கனிகள் சேராத உணவு பூரண உணவல்ல.

ஏழைகளும், நடுத்தரமக்களும் தங்கள் உணவில் கனிகளைச் சேர்க்கும் அளவுக்கு வருவாய் இல்லையே எனக் கவலைப்படுகின்றனர். இது அறியாமை. நமது உணவில் ஒரு பகுதியைக் குறைத்து அந்த அளவில் கனிகளைச் சேர்த்துக் கொள்ள ஏன் முடியாது? நாம் கனிகளின் தன்மை, குணம் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ளாதிருப்பதாலேயே நமது உணவில் சத்துப் பொருள்கள் குறைந்துவிடுவதற்கு இடமளிக்கிறேம்.

மக்களின் ஆரோக்கியத்திற்கு அவசியமான கனிவகைகளை ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு பருவகாலத்திலும் பெறலாம். ஆனல் பெரும்பான்மையான மக்கள் அறியாமையினுலும், சந்தேகத்தினுலும், வறுமையினுலும், இதனை அனுபவிப்பதில் தவறிப் போகின்றனர். உஷ்ணப் பிரதேசத்தில் உண்டாகும் கனிகள் குளிர்ப்பிரதேசத்தில் உண்டாவதில்லை. அந்தந்த நாட்டில் உண்டாகும் கனிகளை அந்தந்த நாட்டுமக்கள் தவறுமல் புசிக்கவேண்டும்.

கோடைகாலத்தில் வெள்ளரிப்பழம், நுங்கு, பனம்பழம் பனம்விலைதகளில் இருக்கும் பருப்பு, பனங்கிழங்கு, மாம்பழம், வாழைப்பழம் இவை நமக்கு வெகுவாகக் கிடைக்கும். இவை நம் உணவில் இடம்பெறவேண்டும். அப்படியில்லையென்ருல் குடி முழுகிவிடுமா என்று சிலர் கேட்கலாம். அதற்கு ஆம் என்றுதான் பதில்கூறமுடியும். வெள்ளரிக்காய், வெள்ளரிப்பழத்திற்கு நாவரட்சியைத் தணிக்கும் பெருமையும் சிறுநீர் பிரித்துவிடும் வன்மையும் வாய்ந்தது. வெள்ளரிவிதையை வறுத்து வெல்லம்சேர்த்துச் சாப்பிடலாம். இதே குணம் கிடைக்கும். பனையில் இருந்து கிடைக்கும் கனிப்பொருட்கள் அனைத்தும் ருசியுள்ளதும், மலமிளக்கும் சக்தி உடையதுமாயிருக்கின்றன. இதே பண்புகளைக் கொண்டதுதான் மாம்பழமும், வாழைப்பழமும். நாவற் பழம் நீரிழிவை அடக்கும் சக்தியைக் கொண்டது.

மாம்பழம் மலமிளக்கி மட்டுமல்ல நீர்க்கடுப்புக்குக் கைகண்ட ஔடதமுமாகும். கோடைகாலம் தவிர்ந்த மற்றப் பருவங்களில் உடல் வெப்பத்தால் நீர்க்கடுப்பு ஏற்படுமானல் மாவற்றலைக் குளம்பாக்கி உண்டால் கடுப்பு நின்றுவிடும். மாம்பழத்தைக் கொடிய உஷ்ணமென்று நினைத்துக்கொண்டு இதை உண்ணமை விருப்பவர்களும் இருக்கின்றனர். நம் உடலில் தோன்றும் உஷ்ணத்தை மாம்பழ உஷ்ணம் ஒன்றுதான் சிரமமில்லாமல் அகற்றி ஆரோக்கியம் அளிக்கக்கூடும். மாம்பழம் கொடிய உஷ்ணமாயிருந்தாலும் மக்களின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது.

மாம்பழம் புசித்தவர்கள் இரவில் படுக்கைக்குப் போகுமுன் தவருமல் ஒருகோப்பை பசுவின் பால் அருந்தவேண்டும். அதிகாலையில் குளிர்ந்த (9-ம் பக்கம் பார்க்க)

## பொம்மை

— மு. சுப்பிரமணியம் —

வண்ணமுள்ள பொம்மை
வடிவான பொம்மை
அப்பா வாங்கித் தந்த
அழகான பொம்மை

சின்ன விசையைத்
தூண்டின்
சிப்பாய் போல நடக்கும்
தாளம் போட்டு ஆடும்
தப்பாமல் ஓடும்

தங்க நிறப் பொம்மை
தாடியுள்ள பொம்மை
மஞ்சள் நிறப் பொம்மை
மாடு போலப் பொம்மை

இந்த வகைப் பொம்மை
எல்லாமே உண்டு
சொந்தமாக நானே
தூக்கியாடி மகிழ்வேன்.

## ஆற்றங்கரை

— நல்லை அமிழ்தன் —

ஆற்றங் கரை போகலாம்
அள்ளி மென்னீர்
பருகலாம்
காற்று வாங்கிக்
கொள்ளலாம்
காடும் மேடும்
பார்க்கலாம்

ஓடும் நீரை அள்ளலாம்
உலவி நாமும் திரியலாம்
பாடும் குயிலும்
பார்க்கலாம்
பாரை மீனும்
பிடிக்கலாம்

கரையில் நின்று
குளிக்கலாம்
கவி புனைந்து மகிழலாம்
மலை முகட்டைப்
பார்க்கலாம்
மாலை அழகை
ரசிக்கலாம்

# ஞாயிறு கதை மலர்

# ஆனிச்சம்பங்கி

## மீனு

— "தமிழ்குடி கொண்டான்" —

— 5 —

ஞாயிற்றுக்கிழமை வந்துவிட்டது. நிச்சயம் மீனுக்குட்டிக்கு அது ஒரு பொன்னுள் தான்; இன்பத்திருநாள் தான். ஆனல், சடகோபனுக்கோ...? தம்பி ராமநாதனின் வரவை நினைத்து அன்றைக்கு அவர் எவ்விதமான பரபரப்பும் அடையவில்லை. மகிழ்வுகொள்ளவுமில்லை. சகஜநிஷ்டையில் இருக்கும் ஞானியைப் போலிருந்தார் அவர், பற்று இல்லை, பாசமில்லை; பார்வையில் சமநோக்கு. எல்லாவிதமான ஆசாபாசங்களையும் உதறித்தள்ளிவிட்டது, அவர் மனம். தாமரையிலை மேல் தண்ணீர் போல் எதிலும் ஒட்டாத வாழ்க்கை. ஆனல் கடமையை ஒழுங்காகச் செய்யவேண்டும். அதுதான் அவரின் நினைவு.

காலையிலிருந்தே மீனுக்குட்டி நிலைகொள்ளமல் தவித்துக்கொண்டிருந்தாள். சித்தப்பாவை அவள் முன்பின் பார்த்ததில்லை. அவர் எப்படியிருப்பாரோ? கறுப்போ? சிவப்போ? ஒன்றுமே தெரியாது. மீனுக்குட்டியின் மனதில் ஒரே துடிப்பு. ஆவல், படபடப்பு. ஆனல் நேரம் தான் விரைவில் போகமாட்டேனென்கிறது. அவள் ஆவலோடு மணிக்கூட்டைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

மாலை மலர்ந்தது. நேரம் ஐந்துமணியாயிற்று. சடகோபனின் வீடு களை கட்டியது. உடன் கலகலவென்ற நாதம் எழுந்தது. வெண்கலநாதமோ? அல்ல, அதைவிட இனிமை. வேய்ங்குழலின் கானஒலியைவிட இனிமை. சடகோபனின் குழந்தைகள் தமது செம்பவளவாய் மலர்த்திக் கிள்ளைமொழி பேசிச் சிரித்தன.

சடகோபனுக்கு மீனுக்குட்டி தான் மூன்ருவது பெண். அவளுக்குப் பிறகு நாலு பேர் எல்லாம் பத்து வயசுக்குட்பட்ட குழந்தைகளே. சித்தப்பாவை எதிர்பார்த்து அவர்கள் வாசலுக்குச் சென்று ஆனந்தக் கூத்து நடத்தினர்கள்.

சடகோபனும் வாசலில்தான் அமர்ந்திருந்தார். எதிரே தெரிந்த வெளியுலகம் அவரின் கட்புலனைக் கவர்ந்திழுத்தது.

அடிவானில் அஸ்தமனசூரியன் செழுஞ்சுடராய் மின்னிக்கொண்டிருந்தான். கீழே ஒரே வனப்பு. பசுமை படர்ந்த எழில் கொழிக்கும காட்சிகள். நிலமங்கை அழகு தேவதையாக வீற்றிருந்தாள். உலகின் கண் நிறைந்துள்ள எல்லா வனப்புகளும் இயற்கையின் கைவண்ணத்தால் உண்டாகிய விநோத சிருஷ்டிகள், உன்னத லீலைகள் என்று மகிழ்வு கொள்கிருன் நவயுகமனிதன். ஆனல் சடகோபனே இயற்கைக்குள் கடவுளைக் கண்டார். எங்கும் திருவருட்சக்தியின் மகிமையைக் கண்டு மகிழ்ந்தார்.

மீனுக்குட்டி அசையாதபதுமை போல் வாசலில்நின்றிருந்தாள்; அவள் பார்வை ஆவலோடு தெருவைப் பார்த்தபடியிருந்தது.

சிறிதுநேரம் கழித்து வாசலில் ஓர் அழகான நீலவர்ணக் கார் வந்து நின்றது. சித்தப்பாவின் கார்தான் அது.

பள பளவென்று மின்னும் அக்காரின் வண்ணம் கண்டு மீனுக்குட்டி திகைப்பிலாழ்ந்து போய்விட்டாள். மனதில் ஒரு விசித்திரமான ஆசை தோன்றியது. ஒருமுறை தன் கரங்களால் காரின் மென்மையான மேனியைத் தீண்டிப்பார்த்துவிட அவாக் கொண்டாள் அவள். குறுகுறுத்தநெஞ்சோடு படியிறங்கி வந்தாள். கரம்நீட்டிக் காரைத் தொட்டாள்.

"ஏய் மீனு! காரைத் தொடாதே. அசுத்தம் படிந்துவிடும். எட்டி நில்" என்ற கடுமையான குரல் மீனுக்குட்டியைக் கிடுகிடுக்கவைத்துவிட்டது. நெஞ்சில் பலமான அதிர்ச்சி. இனம் தெரியாத பயமும் பீதியும் அவளை ஆட்கொண்டன. திகைப்போடு நிமிர்ந்து நோக்கினள்.

எதிரே ஒரு விஷமுள்ள மனிதப் பாம்பு சித்தப்பாவின் உருவில் நின்று கொண்டிருந்ததை அவள் கண்டாள். மனதில் ஆழ்ந்த வெறுப்புத் தோன்றியது. இவ்வளவு கடுமையான குரலை அவள் முன்பு கேட்டதில்லை. அப்பா மென்மையாக அன்போடுதான் பேசுவார். ஆனல் இந்தச் சித்தப்பாவோ ...?

மீனுக்குட்டி அப்பாவைத் திரும்பிப் பார்த்தாள். பிறகு சித்தப்பாவைப் பார்த்தாள். அமுதமும் விஷமும், மலரும் முள்ளும் ஒரு தாய் வயிற்றில் எப்படி உதயமாகின?

அப்பா பெருந்தன்மையாகப் பண்போடு குற்றம் செய்தவர்களை மன்னிப்பார். ஆனல் என்னல் முடியாது. அதுவும் இந்தச் சித்தப்பாவை மன்னிக்க என்னல் முடியவே முடியாது.

மீனுக்குட்டியின் மெல்லிய உள்ளம் படார் படாரென்று உடைந்து விட்டது; உடையவில்லை. புஸ்ஸென்று தீபற்றி எரிந்து பொசுங்கிற்று. கண்களில் நீர் முட்ட, உதடுகள் பொருமி வெடிக்கக் குமுறிக் கலங்கியபடி உள்ளே போனுள்.

அப்பாவுக்குப் பக்கத்தில் வந்து நின்ருள்.

ராமநாதன் அகங்காரமாக நிமிர்ந்த தலையோடு மிடுக்கான பார்வையை அங்கு மிங்கும் சுழற்றியபடி வராந்தாவில் ஏறினன். சடகோபனைப் போல் அவன் கறுப்பு நிறமில்லை. மேனி தங்கநிறம். ஆஜானுபாகுவான கம்பீரத் தோற்றம், பரந்த சவர்ச்சியான முகம். கருகருவென்று சுருண்ட மயிர். ஆள் ஆணழகன் தான். வெளியழகு இருந்து என்ன பிரயோசனம்? உள்ளழகல்லவோ மேன்மையைக் கொடுக்கும். ஆனல் மௌடிகம் நிறைந்த இந்த உலகமோ புற அழகைத்தான் பெரிதென நோக்கும். அதுதான் அதற்கு முக்கியம். அழகு என்பது என்ன? அதுவும் ஒரு மயக்கம்தான். உடல் மயக்கம் உடலோடு சம்பந்தப்பட்ட பொல்லாதமயககம். அறிவைக் கெடுக்கிற மயக்கம்.

ராமநாதன் சடகோபனுக்குப் பக்கத்தில் வந்தமர்ந்தான்.

மீனுக்குட்டி வெறுப்போடு அவனை நோக்கினள். "ஏ! சித்தப்பா! உன்னை எனக்குப் பிடிக்கவில்லை. என் அப்பாவுக்குப் பக்கத்தில் அமர உனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? அப்பாவைப் பார். எவ்வளவு சாந்தமாக இருக்கிருர். அவர் குரலைக் கொஞ்சம் கேளேன். உன் காதில் தேன குவி பாயும். அப்பா அன்பின் வடிவம். அவரின் அன்பும் பண்பும் அருளும் கொண்ட தமி முள்ளம் உன்னிடமில்லை நீ ... நீ... கொடியவன். உன்னை நான் வெறுக்கிறேன்."

மீனுக் குட்டியின் மனதில் சீற்ற அலைகள் பொங்கியெழுந்தன. துயரப்பெருக்கு அவளை விம்மச்செய்துவிட்டது. தன்னை மறந்து கேவிக்கேவியழுதாள்.

அப்பா திகைத்துத் திரும்பிப் பார்த்தார். குரல் ஆச்சரியத்தோடு ஒலித்தது.

"மீனு! ஏன் அழுகிருய்?"

"அவள் அழவில்லை, மாய்மாலம் பண்ணுகிருள். அவளை முதலில் உள்ளே அனுப்புங்கண்ணு" என்ருன் ராமநாதன் வெறுப்போடு.

மீனுக்குட்டி வெடுக்கென்று சித்தப்பாவை நிமிர்ந்து நோக்கினள். ஆனல் வாய் திறக்கவில்லை. உள்ளம் மட்டும் பூகம்பமாய் வெடித்துப் பொங்கிக்கொண்டிருந்தது.

சித்தப்பா எனும் மனித உடலுக்குள், அவரின் அழகு கொழிக்கிற ஆடம்பரத்தோற்றத்துக்குள் அந்தரங்கமாய் மறைந்து கிடக்கிற அரக்ககுணம், அசுரத் தன்மை அவளைப் பெரிதும் பலவீனப்படுத்திவிட்டது. அவளின் குழந்தை உள்ளத்தில் அச்சம் தேங்கியது. "பத்மா அக்கா முன்பு சொன்னவையெல்லாம் உண்மை. இந்த உலகம் மிகவும் பொல்லாததுதான். மனிதர்களின் இதயமெல்லாம் கொடிய நச்சுப் புதர்களாய் இருக்கின்றன. அன்பும் அருளும், கருணையும் காணக் கிடைக்காத பண்புகள். விளைகிற அன்புகூட வெறும் சுயநலத்தோடுதான் வெளிப்படுகிறது. இப்படிப்பட்ட உலகில் நான் பிறந்ததே பெருந்தவருகப் போய்விட்டது."

மீனுக்குட்டியின் மனதை இனம் தெரியாத வேதனை சூழ்ந்தது. நீர் மல்கிய கண்களோடு எழுந்து உள்ளேப்போனுள் அவள்.

— 6 —

சடகோபன் மெல்லத்தொண்டையைக் கனைத்துக்கொண்டு பேச்சைத் தொடங்கினர். மனதில் சிறிது புயல். துன்பப் புயல்தான். கலங்கரை விளக்கம்போல் எல்லாருக்கும் ஒளிபாய்ச்சி நின்ற உத்தமர் இன்றைக்கு இப்படியாகிவிட்டாரே. நாயினும் கடையேனுகி நிற்கிருரே. ஏற்பது இகழ்ச்சியல்லவா? இரந்து கேட்டல் அவமானம்.

இகழ்ச்சி, புகழ்ச்சி போன்ற பண்புகளா சடகோபனை வாழவைக்கின்றன. இல்லையே. அவர் அருளால் உயர்ந்தவர். ஒன்றையும் தாமாகச் செய்யாதவர். எல்லாம் சிவன் செயலென்றிருப்பவர். இப்படிக் கலங்கலாமா?

சடகோபன் துணிந்து விட்டார். பத்மாவின் கவலை தீர்க்க எண்ணித் தம்பியிடம் பணம் கேட்டார்.

ஆனல் தம்பியோ பணத்தை உடனே கொடுக்கவில்லை. உள்ளத்தில் கோபம் கொதித்துப் பொங்க அண்ணனை நிமிர்ந்து நோக்கினன். அவன் அண்ணனைப்பார்த்துப் பற்களை நறநற வென்று கடித்தான். புருவங்களை ஆத்திரத்துடன் நெரித்தான். பின்னர் படபடத்த குரலில் பேசத்தொடங்கினன்.

"அண்ணு! உங்களுக்குச் சிக்கனம் பண்ணத்தெரியாது. சிக்கனமாயிருந்திருந்தால் இன்று இந்தப் பிச்சைக்கார நிலைமை வந்திருக்கமாட்டாதே உங்களுக்கு"

ராமநாதனின் கோபத் தீ-கொடூரச் சொற்கள் சடகோபனைச் சுட்டுவிடவில்லை. அவரை எந்தநெருப்பும் சுடாது. இழிந்த உடலின் தன்மையை அவர் என்ரே மறந்து விட்டார். இன்று இருப்பது ஒன்றுதான். அவர் இப்பூமியில் ஜனிப்பதற்கு எது ஆதாரமாய் நின்றதோ அது அந்தத் தெய்வமே அவருள் நின்று அவரை இயக்குவிக்கிறது. அவர் கரங்கள் பூரண திருப்தியுடன் கர்மயோகம் புரிகின்றன. தம்வாழ்வை ஒரு தியாக வேள்வியாக்கி அந்தப் புண்ணிய வேள்வித் தீயில் குதித்து அவர் தம்மை ஒரு புனித பண்டமாக்கிவிட்டார். அவரே ஞான நெருப்பாக ஒளிர்கிருர். பிற நெருப்பு அவரைச்சுடுமா?

தம்பியின் வசைமொழிகளைக் கேட்டு அவர் மெல்லப் புன்னகை சிந்தினர். அதுதான் அவர் பதில்.

அண்ணனின் மௌனசித்தம் கண்டு இராமநாதன் மறுபடியும் கோபாவேசம் கொண்டான். மீண்டும் மீண்டும் அவன் வாயிலிருந்து சொல் அம்புகள் மிகவும் கடுமையாக வெளிவந்தன. சொல் அம்புகளா அவை. விஷபாணங்கள். சடகோபன் வீரராயிருந்தபடியால் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டார்.

ஆனல் மீனுக்குட்டியோ! உள்வராந்தாவில் அமர்ந்து அவள் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டுதான் இருந்தாள்.

அவளால் பொறுக்கவே முடியவில்லை. இந்தச்சித்தப்பா பெரிய அதர்மம் செய்கிருர். அப்பா எவ்வளவு பெரியவர். அவர் காலடியில் கிடந்து அவருக்குத் தொண்டாற்ற வேண்டிய கடமையைச் சித்தப்பா ஏன் புரிந்து கொள்ளமறுக்கிருர்? அநியாயமாக அப்பாவைத்திட்டுகிருனே. நான் விடமாட்டேன். என் அப்பாவைத் திட்ட நான் விடவேமாட்டேன். இருந்தாலும் அப்பா இவ்வளவு சாத்வீகமாக இருக்ககூடாது. சேச்சே! அப்படியெல்லாம் நான் நினைக்கிறேனே. அப்பா பாரதக்கதையில் வரும் தருமருக்குச் சமானமானவர். பொறுமையாக இருந்து நல்லவழியில் நடக்கிருர். வெற்றிகிட்டாமல் போகாது...

மீனுக்குட்டி சோர்ந்துவாடிய முகத்தோடு இருந்து சித்தப்பாவின் வசைமாரியைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

இதற்கிடையில் அம்மா சித்தப்பாவுக்குத் தேநீர் எடுத்துக்கொண்டு போனுள்.

இராமநாதன் முகத்தைச் சுளித்தான். பார்வையில் ஓர் அருவருப்பு. ஏழைகளின் மனமுவந்த உபசாரத்தைக்கூட அவன் விஷமாகத்தான் கருதுவான்.

அப்போதும் சுந்தரி கொண்டு வந்த தேநீரை அவன் ஏதோ சாக்குப் போக்குச்சொல்லித் தட்டிக்கழித்துவிட்டான்.

சுந்தரி ஏமாற்றத்தோடு தேநீரும் கையுமாக உள்ளே போனுள்.

எல்லா உரையாடலும் முடிந்தபின் கடைசியில் பலவிதமான தர்க்க நியாயங்களை எடுத்துக்காட்டி இராமநாதன் முடிவைச் சொல்லிவிட்டான். பத்மாவின் கலியாணச்செலவுக்குத் தன்னுல் ஆக ஐந்நூறு ரூபாய்தான் கொடுக்கமுடியுமாம்.

சடகோபனுக்கு அது என்னத்தைக்காணும். ஆனல் அவர் ஏதும் பேசவில்லை. மௌனமாகத் தம்பியின் விருப்பத்தை ஏற்றுக்கொண்டார்.

உடனடியாகவே இராமநாதன் ஐந்நூறு ரூபாய் காசை எடுத்துச் சடகோபனிடம் கொடுத்துவிட்டுப் புறப்பட்டுவிட்டான்.

சடகோபன் பணத்தை எடுத்துக்கொண்டு உள்ளே போய்ச் சுந்தரியிடம் சமாசாரத்தைத் தெரிவித்தார்.

சுந்தரி அலட்சியமாகப் பேச ஆரம்பித்தாள். "உங்களுக்குப் பைத்தியம். உங்கள் தம்பிக்கும் பைத்தியம். பத்மாவின் கலியாணச் செலவுக்கு இந்த ஐந்நூறு ரூபாய் போதுமா? பிச்சைக்காசு. நீங்கள் இராமநாதனுக்குச் செய்த உதவக்கு அவன உங்கள் காலடிகளில் லட்சம் லட்சமாகப் பணத்தைக் கொட்டவேண்டும். அதுதான் நியாயம். ஆனல் அவனே உங்களை ஏமாற்றிவிட்டான். இனி என்ன செய்வது?"

"சுந்தரி! உனக்கு எத்தனை தடவை சொல்வது? மனத்தை அலட்டாதே. வாழ்க்கையிலே எவ்வளவோ கஷ்டங்கள். இன்ப துன்ப அனுபவங்கள். எல்லாவற்றையும் தாங்கித்தானே ஆகவேண்டும். பத்மாவின் நல்வாழ்வுக்குத் தெய்வம் ஒருவழிவிடாமலா போகப்போகிறது" என்ருர் சடகோபன்.

மீனுக்குட்டியின் மனநிலை அன்று வேறுவிதமாக இருந்தது. அவள் எதுவுமே பேசாமல் ஒரு மூலையில் சோகசித்திரமாகக் கலங்கிய கண்களோடு அமர்ந்திருந்தாள். சித்தப்பாவை மறக்க அவளால் முடியவில்லை. அவர் செய்த கொடுமையை எண்ணி எண்ணி அவள் தனக்குள் குமைந்து கொண்டிருந்தாள்.

— 7 —

பத்மாவுக்குக் கலியாணம் நிச்சயமாகிவிட்டது. கோண்டாவிலிலிருந்து ஒரு பையனைச்

(8-ம் பக்கம் பார்க்க)

## பஸ் அகராதி

— பொ. சண்முகநாதன் —

**பிரதிபலிக்கும் கண்ணடி:** டிரைவருக்கு முன்னுலுள்ள இக்கண்ணடி பஸ்சுக்குள் நடக்கும் நிகழ்ச்சிகளை டிரைவர் அறிவதற்கு உதவுகிறது. இதன் உதவியால்தான் பல பஸ் விபத்துகளும் நடந்து வருகின்றன என்று கூறப்படுகிறது.

**சாளரம்:** புகை பிடிக்கும்-வெற்றிலை போடும் பிரயாணிகள் எச்சிலைத் துப்புவதற்கு உதவும் வழிதான். இது இதனல் தெருவில் போவோரின் 'அறம்...'லுக்கு மேற்படி பிர...ணி... இலக்காவதா... உண்டு.

**அமுக்கு பொத்தான்:** பன்னசை நிறுத்த... பஸ்சின் கூடாரத்திலிருக்கும் இந்தப் பொத்தானை அமுக்கியதும் டிரைவரின் பக்கத்தில் ஒரு மணி அடிக்க வேண்டும். ஆனல் அது கட்டாயம் அடிக்குமென்பது நிச்சயமில்லை. அப்படி அடித்தாலும் ... உடனே நின்றுவிடாது. குறைந்தது இருநூற்றி ஐம்பது யாருக்கப் ...ல்தான் சென்று நிற்கும்.

**ஸ்டியரிங்:** இது வண்டியைத் திருப்புவதற்கு பயன்படும் திருப்புவட்டம். டிரைவரானவர் ஆசனத்தில் அமர்ந்தபடியே சாய்ந்து படுத்துத் தூங்குவதற்கும் பயன்பட்டு வருகிறது.

**தொங்கு கம்பி:** எப்பொழுதும் பஸ்சின் ஆசனங்களில் இருப்பவர்களிலும் பார்க்க இக்கம்பிகளில் தொங்கிக்கொண்டிருப்பவர்களே அதிகம். ஆனலும் இக்கம்பிகள் கழன்று விழாமலும் முறிந்து விழாமலும் இருப்பதை உலகத்திலுள்ள எட்டாவது அதிசயமாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

**ஆசனம்:** கால்சட்டை போட்ட சிறுவர்கள் தங்களுக்குத் தேவையான விளையாட்டுப் பொருட்கள் செய்வதற்கும், அழி இரப்பர்களுக்கும் இங்கிருந்துதான் இரப்பர் எடுக்கிருர்கள். வரவர இப்பொருளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது. வருங்காலச் சந்ததி என்ன செய்யப் போகிறதோ?

**முதல் உதவிப்பெட்டி:** இப்பெட்டியின் மேல் சிவப்புப் புள்ளடி ஒன்றுபோடப்பட்டிருக்கும். டிரைவர், கண்டக்டர்களுக்குத் தேவையான வெற்றிலை, பாக்கு, புகையிலை, உணவுப் பொருட்களை இங்கு பாதுகாப்பாக வைக்கலாம்.

**உள்வளைந்த போனற்:** இதற்குப் பக்கத்தில் இருக்கநேரும் சாரதிகளும் பிரயாணிகளும் முற்பிறப்பிலே என்ன பாவம் செய்தனரோ? போனற்றில் எந்நேரமும் சூடு தகதகவென்றிருப்பதால் இதில் அப்பமும் சுடலாம். அப்பம் சுட்டுபிரயாணிகளுக்கு வியாபாரம் செய்யவிரும்பும் அதாவது நடமாடும் அப்பக்கடைவைக்க விரும்பும் பெண்கள் இ. போ. ச. தலைவருக்கு விண்ணப்பிக்கலாம்.

பிரயாணக் கட்டுரை

# அரசாங்க உத்தியோகத்துக்கு மதிப்பளிக்காத நாடு

— கா. சதாசிவம்பிள்ளை பி. எஸ். ஸி. —

(மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி, வவனியா)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

உலகில் மிகவும் சிறந்த உலோகங்களும் மூலப்பொருட்களுமுள்ள ஒரு சில நாடுகளில் கனடா தேசம் மிகவும் முக்கியமானது. செம்பு, தங்கம், இரும்பு, வெள்ளி, ஈயம், நாகம், நிலக்கரி, பெற்ரோல் போன்ற நில எண்ணெய் வகைகளும் இந்நாட்டில் போதியளவு இருக்கின்றன. இதைவிட அணு சக்தி உண்டாக்குவதற்கு அத்தியாவசியமான "யுறேனியம்" என்னும் உலோகமும் தாராளமாக இருக்கிறது.

கனடாதேசமே உலகின் கடதாசித் தேவையில் ஐந்தில் மூன்று பங்கைத் திருப்தி பண்ணுகின்றது. கனடாவில் பலவேறு தொழில்களுக்கும் பாவிக்கப்படும் சக்தியில், 90 சதவீதம் மின்சார சக்தியையே பாவிக்கிறார்கள்.

நாட்டின் பொருளாக்க வருமானத்தின் 50 சத வீதம் விவசாயத்திலிருந்தே கனடா தேசத்திற்குக் கிடைக்கிறது. நற்திறனுள்ள கோதுமைக்குப் பேர்பெற்ற தேசமும் கனடாவே. கனடாவின் பேர்பெற்ற கோதுமை வயல்கள் எல்லாம் பிறையறி மாகாணங்களான மனிற்ரோபா, ஸஸ்கட்டுவான் அல்வேற்ரா முதலிய பகுதிகளிலேயே பெரும்பாலுமிருக்கின்றன. இம்மாகாணங்களில் ஒரு தனிக்கமக்காரன் சில ஆயிர ஏக்கர்கள்கொண்ட கமமுடையவனாயிருப்பது சர்வ சாதாரணம்.

பிறையறி மாகாணங்களில் உள்ள கமக்காரர்கள் சிலர் தாங்களாகவே செலுத்திக் கொண்டுசெல்லக் கூடிய சிறிய ஆகாயவிமானங்கள் வைத்திருக்கிறார்கள். இவர்களிருக்குமிடங்களில் மாரிகாலங்களில் அதிக பனிமழை வீழ்ச்சி ஏற்படும். நாளொன்றிற்கு 7 அல்லது 8 அடி உயரம் வரை பனிமழை பெய்வது சர்வசாதாரணம். இவ்விதம் பனிமழை வீழ்ச்சியுற்றபின்பு வீதிகளிலுள்ள பனிமழைப் படைகளை ஒதுக்கிவிட்டுத்தான் வாகனங்கள் வீதிவழியே செல்லவேண்டும். இவ்விதம் ஒதுக்கினால் தான் கார்வீதிகளில் ஓட்டலாம். இவ்வாறெல்லாம் செய்து கார் ஓட்டுவது மிகவும் சிரமமான விடயம். ஆகவேதான் கமக்காரர்கள் தாங்களே செலுத்திச் செல்லக்கூடிய ஆகாயவிமானங்களை வைத்திருக்கிறார்கள்.

பிறையறி மாகாணத்தில் மக்கள் வசிக்கும் வீடுகள் சில இடங்களில் ஒருமைல் ஒன்றரை மைலுக்கப்பால் தானிருக்கும். அழகிய காட்சிகளும் ஆதி அந்தமில்லா திருப்பன போன்ற அகண்ட பிரதேச வெளிகளும், பிறையறிமாகாணங்களுக்கூடாகப் பிரயாணம் செய்யும் எவரும், சாதாரணமாகக் காணும் காட்சிகளாகும். இவ்விதம் தூரத்திற்கொன்றாக இருக்கும் வீடுகளில் வசிக்கும் கமக்காரர் தங்கள் இல்லங்களுக்கு வருவோர் மேல் அளப்பரும் அன்பு சொரிந்து விருந்தோம்புவார்கள்.

சாதாரணமாக எல்லாக் கமக்காரரும் சொந்தக்கார்கள் வைத்திருப்பார்கள். கமவேலைகளுக்குச் சிலரை உதவியாட்களாகச் சம்பளம்கொடுத்து வைத்திருப்பார்கள். வீட்டு வேலைகளுக்கு வேலையாட்கள் பிடிப்பது கஷ்டம். ஆகவே கமக்காரர்கள் தொடக்கம் நாட்டின் அரசாங்க சேவையாளர்வரை தங்கள் தங்கள் வீட்டு அலுவல்கள் அத்தனையையும் தாங்களே செய்து கொள்வார்கள். துணிமணிகளைக் கழுவும்வேலைகூட அவரவரே செய்துகொள்வார்கள். இந்நாட்டில் பிறத்துவேஷமோ வேறு எவ்வித துவேஷமோ கிடையாது. மனிதனை அவனின் தகுதிக்குத் தக்க மதிப்பளிக்கிறார்கள்.

இந்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம், அதுவும் படித்தவர்கள்நடுவே உள்ள வேலையில்லாத்திண்டாட்டம் மிகக் குறைவு. எனது 3 வருட வாழ்க்கையில் இரப்போரைக் காணமுடியவில்லை. நாட்டில் உள்ளவர்கள் அனைவருக்குமே வேலை கொடுக்கத்தக்கதாகக் கனடாவின் பொருளாதாரம் முன்னேறிக்கொண்டு போகின்றது. பல்கலைக் கழகங்களில் பட்டதாரிகளின் இறுதிச் சோதனை நடக்கச் சில வாரங்களுக்கு முன்பே காலியான உத்தியோக இடங்களை வைத்துக்கொண்டு அவைகளை நிரப்ப அவதிப்படும் அரசாங்கப் பகுதிகளின் அதிபர்களும், சுயமுயற்சியான முதலாளிகளும், பாடசாலை மேலதிகாரிகளும் பட்டம் பெற்றுக் கொண்டு வெளியேறவிருக்கும் மாணவர்களைச் சந்தித்துத் தங்கள் அதிகாரத்தில் காலியாக உள்ள உத்தியோகங்களைப் பற்றியெல்லாம் பிரசாரஞ் செய்து அவைகளை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்வர்.

இவ்விதம் பிரசாரம் செய்துங்கூட ஒரு சிலரே அரசாங்க சேவையில் உத்தியோகம் வகிக்க உடன்படுவார்கள். சாதாரணமாக அரசாங்க உத்தியோகம் வகிப்பவர்களை ஏதோ ஒருவித சோம்பேறிகள் என்றே மதிப்பிடுகிறார்கள். எங்கள் தேசத்தில் அரசாங்க உத்தியோகத்திற்கு மக்கள் கொடுக்கும் மதிப்பும் கௌரவமும் கனடாவில் கிடையாது. இது இவ்விதமிருந்தும் அரசாங்க சேவைத் தெரிவுகளனைத்தும் தகுதியையும் கெட்டித்தனத்தையும் பொறுத்தே நடக்கும். கனடாவில் அரசாங்கம் அதன் பிரஜைகளுக்கு எத்தனையோ சமூகநல சேவைகள் செய்கின்றது. எழுபது வயதிற்கு மேற்பட்ட கனடா மக்கள் அனைருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபா 350/- வரை பெறுமதியான வயோதிப உபகாரச் சம்பளம் கொடுக்கிறது. கனடாவில் பிறக்கும் பிள்ளைகளினது தாய்மாருக்கு அப்பிள்ளை 18 வயதடையும்வரை பிள்ளையொன்றிற்கு நாற்பது ரூபாய்பெறுமதியான உபகாரச் சம்பளம் கனடா அரசாங்கம் கொடுக்கின்றது. இதைவிட அங்கவீனர், உழைக்கும் சக்தியற்றவர் முதலியவர்களுக்கும் அரசாங்கம் மாதாந்த உபகாரச் சம்பளம் கொடுக்கிறது.

பிள்ளைகளினதும் வயோதிபரினதும், உபகாரச் சம்பளங்கள், கனடாவின் பிரஜைகள், வறியவர்கள். பணக்காரர் முத

(9-ம் பக்கம் பார்க்க)

## மீனு

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சடகோபன் தம் மருமகனைத் தேர்ந்தெடுத்திருந்தார். பையனுக்குச் சுமாரான உத்தியோகம் நல்ல குணம். சுந்தரி உட்பட வீட்டில் எல்லோருக்குமே அந்தப் பையனை நன்கு பிடித்துவிட்டது. இனி என்ன, விவாகம் ஜாம் ஜாமென்று நடைபெறவேண்டியது தான். ஆனால் பணம்...?

சடகோபன் யாரிடமோ கடன் வாங்கிவிட்டார். அதுவும் கொஞ்ச நஞ்சமா? ஐயாயிரம் ரூபாய். சடகோபனைத் தெய்வம் சோதனை செய்து கொண்டிருக்கிறது. ஒவ்வொன்றிலும் வெற்றிதான். இன்னும் அவர் நிதானத்தை இழக்கவில்லை.

அன்று சனி விரதம். சடகோபன் ஒவ்வொரு விரதத்தையும் தவறாமல் கடைப்பிடிப்பார். விரதம் அனுஷ்டிப்பதால் மனிதனின் ஆத்மா புனிதமடைகிறது. புலன்களின் இச்சையும் ஓரளவு அடங்குகிறது.

பகல் ஒரு மணி. சடகோபன் பசித்த வயிறோடு இலைக்கு முன்னால் அமர்ந்துவிட்டார். மீனுக்குட்டி அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தாள்.

சாப்பாடெல்லாம் போட்டாயிற்று. இன்னமும் சடகோபன் உணவை வாயில் வைக்கவில்லை. அதற்குள் வெளியே ஒரு குரல் கேட்கிறது. அவர் சாப்பாட்டை அப்படியே விட்டு எழுந்து போனார்.

வெளியே ஒரு காவியுடைச் சந்நியாசி நின்றுகொண்டிருந்தார். சடகோபன் உள்ளச் சிலிர்ப்புடன் கரங்கூப்பி அவருக்கு வணக்கம் செலுத்தினர்.

பெரியவருக்கு ஓரே பசி. உணவிருந்தால் தரும்படி அவர் சடகோபனைக் கேட்டார். சடகோபன் விரைவாக உள்ளேபோய் மீதியாய் உணவிருக்கிறதா என்று சுந்தரியைக்கேட்டார். இல்லையென்று சொல்லிவிட்டாள் அவள்.

சடகோபன் வெளியே போய் சந்நியாசியை அழைத்து வந்து தமக்கெனப்போட்டிருந்த இலையின் முன்னால் அவரை உட்கார வைத்தார்.

மீனுக்குட்டி சட்டென எழுந்து நின்று அப்பாவை வியப்போடு பார்த்தாள். "அப்பா இன்று பட்டினி இருக்கப் போகிறாரா? வேண்டாம் நான் உணவை அவருக்குத்தானம் பண்ணிவிடுகிறேன். அப்பாவின் அறப்பண்புகள் ஒருபோதும் மாளாது. அவர் தர்மசீலர். வாழ்க அவரின் அருளுள்ளம்"

உணர்ச்சிப் பெருக்கால் மீனுக்குட்டி ஆனந்தக் கண்ணீர் வடித்து நின்றாள்.

(தொடரும்)




படிக்கவும் பந்தடிக்கவும்
பெலன் பெற தம்பிக்கு
விசேஷமாக கொடுக்கச் சிறந்தது
மாமைட்

ஓடி ஆடி விளையாடுவதற்கும், ஊக்கத்து
டன் பாடங்களை படிப்பதற்கும், நாளொரு
மேனி பொழுதொரு வண்ணமாய் வளர்வ
தற்கும் குழந்தைகளுக்கு நிரம்பிய சக்தி
யும் பெலனும் அவசியம். ஆகவே அவர்
களுக்கு மாமைட் விசேஷமாகத் தேவை.
B வர்க்க விட்டமின்கள் நிறைந்திருக்கும்
மாமைட் அவர்களை அனுதினமும் திட
காத்திரமாகவும் சுகமாகவும் இருக்கச்
செய்கிறது.

ஆரோக்கியமாக சக்திமிகுந்து இருப்ப
தற்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B
விட்டமின்கள் அவசியம். உங்களுக்கு
அனுதினமும் தேவையான B விட்டமின்
கள் அனைத்தையும் அளிப்பது மட்டுமின்றி,
மாமைட் ஒரு சிறந்த உணவு பொருளாக
வும் இருக்கிறது. வெந்நீரிலோ அல்லது
வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சம்
பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ
மாமைட் அருந்தலாம். மாமைட்டை பட்ட
ருடன் அல்லது பட்டரின்றி ரொட்டி, பிஸ்
கட் அப்பம் இவற்றில் இலேசாக பூசி
சாப்பிடலாம். குழம்பில் அல்லது சூப்பில்
மாமைட் சேர்ப்பதனால் அவற்றிற்கு
மேலும் சுவையூட்டுகிறீர்கள். B வர்க்க
விட்டமின்களை எளிதாக உட்கொள்
வதற்கு மிக்க சுவையான முறை
மாமைட்டை உங்கள் தினசரி உணவுடன்
சேர்த்துக்கொள்வதே.

மாவுப் பொருள்
சர்க்கரைப் பொருள் அற்ற,
B விட்டமின் நிறைந்த,
தூய்மையான,
தாவர உணவுப்
பொருள்.




மாமைட்

# கலை அரங்கம்

## பரத பாரம்பரியம்



செல்வி லீலாம்பிகையின் ஒரு நடனத் தோற்ற

பரத பாரம்பரியத்துக்குப் புத்துயிரும் புதுப் பொலிவும் அளித்து வரும் ஆடல் இறைவியர் பேரணியில் ஒரு பிரபாமணி என ஒளிரும் செல்வி லீலாம்பிகை சென்ற வாரம் யாழ். நகர மண்டபத்தில் அரியதோர் நாட்டிய நிகழ்ச்சி அளித்து கலாரசிகர்களை களிபேருவகையில் ஆழ்த்தினர்.

மேகலை கொஞ்சிக்கலீரிட, பாவமும் ராகமும் தாளமும் பின்னிப்பிணைந்து வண்ண வண்ண மலர்களாய் சொரிய, அலாரிப்பு, ஜதி, சப்தம், வர்ணம், அபிநயம் எனப்படும் பரத காவிய பஞ்சலட்சணங்களும் பொங்கிவரும் பெருநிலவில் பாடிவரும் தேனருவியென தாம் பயின்ற வித்தையில் பொங்கிப் பிரவகிக்க, நீண்ட மூன்று மணிப் பொழுதை நிமிடமும் நொடியுமாக்கிச் சொப்பன விந்தையே காட்டிவிட்டார்.

துதி செலுத்த மேடை ஏறிய கலையரசு சொர்ணலிங்கம் " இவள் என் உறவு முறைப் பெண்ணாயிருக்கிறாள். அவளைக் குறித்து மேலே நான் என்ன சொல்லப்போகிறேன்" என்று திகைத்து உணர்ச்சி மல்க தர்ம சங்கடப்பட்டு நின்றார். அந்தமாத்திரத்தே அன்றைய நிகழ்ச்சியின் இலக்காயிருந்த 'கலைக்கோவில்' பூரண பொலிவுடன் சுபசோபிதமாக எழுந்து விளங்கியதை சபையில் கூடியிருந்த ஒவ்வொருவரும் கண்டு மெய்சிலிர்த்தார்கள்.

"கலைக்குள்ள அற்புத சக்திதான் எத்தனை மகத்தானது" என்று கூறி வியந்தார் நகராதிபதி திரு. டி. எஸ். துரைராசா.

அன்றைய நிகழ்ச்சிக்கு திருமதி அம்பிகா தாமோதரம் கோஷ்டியினர் அழகாகப் பின்னணி பாடி உதவினார்கள்.

—'மேகலை'

நேரு அஞ்சலி

### யாரை உனக்கிணை சொல்லிடலாம்!

"கூடல் நாடன்"

மன்னுயிர் யாவையும் உன்னுயிர் போல
மதித்திங்கு வாழ்ந்துமே நம்முடலின்
இன்னுயி ரோடொன்றாய் ஆயினை ஆனதால்
எப்படி நீ மறைந் தாயெனலாம்.

தோன்றின் புகழோடு தோன்றுக என்றவப்
பொய்யில் புலவன் புகழுரையை
ஈன்ற பொழுதிருந் தேகொண் டிருந்தனை
யாரை உனக்கிணை சொல்லிடலாம்.

போரில் உலகினை மாய்த்திட எண்ணிடும்
புல்லர் வெறியினை நீ கெடுத்தாய்
பாரில் உனக்கிங்கு யாரிணை யாமெங்கள்
பாரதத் தாய் பெற்ற பண்புருவே.

## கனடாவில் அரசாங்க உத்தி...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

லிய அனைவருமேபெற அருகதையாவர்.

சாதாரண கனடா தேசத்து மக்களில் ஆங்கில மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் பிரித்தானியா தேசத்தை மிகவும் அன்புடன் "பழையதேசம்" என்று அழைப்பர். வாழ்க்கையில் ஒரு தரமாவது பிரித்தானியா தேசத்திற்குச் செல்லவேண்டுமெனப் பெரிதும் விரும்பி எதிர்பார்த்துக்கொண்டிருப்பர். கனடாவிலுள்ள பிரெஞ்சு மொழிபேசும் மக்கள் பிரான்ஸ் தேசத்தை மிகவும் கௌரவமாக மதித்த பொழுதிலும், தாங்கள் பேசும் பிரெஞ்சும், தங்களின் பிரெஞ்சுப் பண்புகளும் பிரான்ஸ் தேசப் பண்புகளிலும் அவ்விடம் தற்போதுபேசப்படும் பிரெஞ்சு மொழியிலும் உயர்ந்ததெனக் கருதுகிறார்கள்.

பிரெஞ்சு மக்கள் அதிகமாக வாழும் குயுபெக் மாகாணத்தில் வேறு மொழிகளில் வேண்டியளவு அறிந்திருந்தாலும் அம்மாகாணத்து பிரெஞ்சுமக்கள் பிரெஞ்சுமொழியைவிட வேறு மொழிகளில் சல்லாபஞ் செய்ய விரும்பமாட்டார்கள்.

குயுபெக் மாகாணத்தில் பிரெஞ்சுமக்கள் தங்களுக்கே உரித்தான தனிப்பண்பை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அம்மாகாணத்தில் சிற்ப ஓவியக்கலைகளுக்கே கோயிலெடுத்தாற்போலென்னும்1771-ம் ஆண்டு கட்டி எழுப்பப்பட்ட மிகவும் அழகு வாய்ந்த கத்தோலிக்க ஆலயமொன்றுளது. இதன் உள்ளிருக்கும் மரங்களிலும் உலோகங்களிலும் செதுக்கப்பட்ட உருவங்களும், சிலைகளும், பண்பு மிகு ஓவியங்களும் மாதக்கணக்காகவே ஒழுங்காகப் பார்த்து இன்பமனுபவிக்கக் கூடியளவு அழகுள்ளன.

கனடா தேசம் ஏனைய உலகிற்குமே எடுத்துக்காட்டாகவும், கனடா தேசத்தவர்கள் அனைவருமே பெருமை கொள்ளுக் கூடிய விதத்திலும் இத்தேசத்தவர்களிடம் காணும் பண்பு மிகு குணாதிசயம் சகிப்புத் தன்மையே.

இக் குணாதிசயம் இளைஞர் தொடக்கம் வயோதிபர் வரை அனைவரிலுமே காணப்படுகின்றது. நான் ஆயிரக்கணக்கான கனடா மாணவர்கள் கல்விபயின்று கொண்டிருந்த பல்கலைக்கழகத்தில் எனது 3 வருட அனுபவத்தில் ஒரு கனடா மாணவன் இன்னொரு கனடாமாணவனுடன் சண்டையிட்டதைக் காணமுடியவில்லை. அத்தேச மாணவர்கள் நல்ல தாராளமாக விவாதிப்பார்கள். விவாதங்கள் முன்னேறி ஏதாவது கோபமூட்டும் நிலையை அடைந்து விட்டால் அதற்கு மேல்விவாதத்தைத்தொடர்ந்து நடத்தாது அவ்விடத்தைவிட்டுப் பிரிந்துவிடுவர். பின்பு விவாதத்தில் ஈடுபட்டு முன் கூறியவாறு பிரிந்தவர்கள் அடுத்த நாள் மிகவும் அந்நியோன்யபான்மையில் ஒருவர்க்கொருவர் சேமலாபங்கள் விசாரிப்பர்.

அத்தேசத்து அலுவல்களில் தலைமை வகிப்பவர்கள் அனைவரிடமுமே இவ்வித சகிப்புத் தன்மை அதிகம் இருக்கக் காணலாம். மொழி, பண்பாடு, சமயம், சாதி முதலியனவைகளில் கனடா தேசத்து மக்களுள் எவ்வளவோ வித்தியாசங்கள் இருந்தும் கூட அனைவரும் மேற்கூறிய விஷயங்களில் சம சந்தர்ப்பங்களும், சம உரிமைகளுமுடையவர்களாய் விளங்குகிறார்கள் இதை அவர்களின் அரசியலமைப்பு மிகவும் கவனத்துடன் பாதுகாக்கின்றது. ஜனநாயகப் பெரும்பான்மை என்பது அங்கே மொழிவாரிப்பெரும்பான்மையாகவோ அல்லது சமயப் பெரும்பான்மையாகவோ மாறாது ஜனநாயகம் மிகவும் திருப்திகரமான முறையில் இயங்குகின்றது.

சுருங்கக் கூறின் கனடா தேசத்து மக்களில் அனேகர்,

## ஆலய உற்சவம்

வட்டுக்கோட்டை, சனி

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் ஆனிஉத்தரஉற்சவங்கள் அடுத்தமாதம் 5-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 14, 15-ம் திகதிகளில் முறையே தேர், தீர்த்த உற்சவங்களுடன் முடிவுறும். இத் தினங்களில் பகலில் விசேஷ மேளவாத்தியங்களுடன்சுவாமி வீதிவலம் வருதலும் நடைபெறும்.

## சிறுவர் பூங்கா...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நீரில் குளிக்கவும் வேண்டும். இதைச் செய்யாமலிருந்தால் உடம்புவலி, அலுப்பு தோன்றும். இது உடல் நலத்தைப் பாதிப்பதில்லை. பேராசையோடு அதிக பழம் சாப்பிட்டவர்களுக்கு வயிற்றுப்போக்கு, அடிக்கடி மலம்கழிதல் ஏற்படும். அவர்களுக்கு மாங்கொட்டை சுட்டு, உள்ளிருக்கும் பருப்பைத்தின்று, ஒரு கோப்பை தண்ணீர் அருந்தச் செய்வது பரிகாரமாகும்.

மாம்பழம் ருசியானது. மலமிளக்கித் தருகின்றது. அதிகஅளவு உணவை உட்கொள்ள உதவுகின்றது. நீர்க்கடுப்பை வரவொட்டாமல் தடுக்கிறது.

"வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள்
வைக்கப்படும்"

என்ற திருக்குறளுக்கு இலக்காக வாழ்கிறார்கள். அன்பும், அமைதியும் பொறுமையும், இலட்சுமீகரமும் அந்நாட்டில் போதியளவு நிலவுகின்றன.

(முற்றும்)


### வரி விளம்பரம்

**தொய்வு, நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 20 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50 வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**கபிரியேல் தயாரிப்புகள்**

1. கபிரியேல் பெயின் ஒயில்
சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஓயின்மென்ற்
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண்களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்
தடிமன், தலையிடி, சந்துவலி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள் :
கபிரியல்வைத்தியசாலை, சுன்னுகம்
GABRIELS, Chunnakam. 273


## உற்சவம் முடிவு

உடுப்பிட்டி, சனி

யாழ்ப்பாணம் பிரசித்தி பெற்ற பொலிகண்டி கந்தவனக் கோயில் வருடாந்த உற்சவம் ஊரணிக்கரையில் நடைபெற்ற கடல் தீர்த்தத்துடன் முடிவடைந்தது.


**REGAL — JAFFNA**
**NOW SHOWING**
Daily 3 Shows. Sats & SunsFour
Robert Taylor
in
M. G. M's
**GUNSof WYOMING**
(East Man Colour)

**மகத்தான 6-வது வாரம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
நடிக்கும்



**நானும் ஒரு பெண்**

**விரைவில் வருகிறது !**
கேப்பிட்டல் - பினாஸ
மற்றும் சினிமாஸ் திரைகளில்
**கொஞ்சும் குமரி**

# தமிழனின் தனிச்சிறப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாடவேண்டும். இது வருடா வருடம் கொண்டாடப்பட்டு யாவருக்கும் பாண் கொடுக்கப் படவேண்டுமென்பதே என் விருப்பம்." எனவும் அவர் குறிப்பிட்டார்.

### தமிழ் தொண்டு பூர்த்திபெறுகிறது

"பாரதிக்கும் வள்ளுவனுக்கும் விழா எடுப்பது மரபாகி விட்டது. இதனால் தமிழ்த் தொண்டில் பாதிவேலைதான் முடிந்துள்ளது. கம்பனுக்கும் விழா எடுப்பதன் மூலம்தான் தமிழ்த் தொண்டின் முழுவேலையும் முடிவடையும்" என்று வரவேற்புரை நிகழ்த்திப் பேசும் போது டாக்டர் செ. சிவஞானசுந்தரம் கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் கம்பன் கழகம் ஆரம்பமானது. ஈழநாட்டில் கவிச் சக்கரவர்த்தி கம்பனுக்கு ஒரு கழகம், ஒரு ஏடு, வருடா வருடம் விழாக்கள் அவசியம் தேவையென்று முதன் முதலாக தெரிவித்த பெருமை நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையாவையே சாரும்.

நேற்றுக் காலை கம்பன்விழா எம். எஸ். சண்முகநாதன் குழுவினரின் மங்கல இசையுடன் ஆரம்பமானது. கம்பன் சித்திரப் போட்டிக்கு வரையப் பட்ட படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.



யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை சட்டக் கல்லூரியில் நடைபெற்ற ஆங்கிலக் கட்டுரைப் போட்டியில் சட்ட மாணவர் க. பரமசிவம்பிள்ளை பரிசொன்றைப் பெற்றுள்ளார். இப்போட்டியில் வெற்றிபெற்ற ஒரே தமிழர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

## காங்கேசன்துறையில் ரயில் தடம்புரண்டது

காங்கேசன்துறை, சனி

நேற்றுக்காலை 7-20 க்கு காங்கேசன்துறைப் புகையிரத நிலையத்தில் ரயில் வண்டிகள் 'சண்டிங்' செய்தபோது ஒரு பிரயாணிகள் வண்டி பிரதான பாதையில், பாதையை விட்டு விலகியதால் யாழ்ப்பாணத்துக்கும் காங்கேசன்துறைக்குமிடையிலான புகையிரத சேவை மூன்று மணி நேரம் வரை தாமதப்படுத்தப்பட்டது. இதனல் இந்த ரயிலில் செல்லவிருந்த பாடசாலைப் பிள்ளைகள் உட்பட பல பிரயாணிகள் பெரிதும் பாதிக்கப் பட்டனர்.

## பஸ் விபத்து

மாவிட்டபுரம், சனி

யாழ்ப்பாணம் கிழக்கு டிப்போவிற்குச் சொந்தமான பஸ் ஒன்று பாதையைவிட்டு விலகி பூவரசம் மரங்களுடன் மோதி அவற்றை அழித்தபின் பஸ்ஸுக்காக காத்துநின்ற ஒருவரையும் மோதி அதன்பின் ஒரு கோயில்காணிக்குள் சுமார் 25 யார்தூரம் சென்று நின்ற சம்பவம் ஒன்று இன்று மயிலிட்டியில் நடைபெற்றுள்ளது.

எஸ். தில்லையம்பலம் என்ற பஸ்சாரதி செலுத்திவந்த பஸ் கீரிமலையிலிருந்து பலாலிக் கூடாக யாழ்ப்பாணம் நோக்கி செல்கையில் மயிலிட்டி காசநோயாளர் ஆஸ்பத்திரிக்கு சில யார் தூரம் தள்ளி இவ்விபத்து நடைபெற்றது. இவ்விபத்தினல் மயிலிட்டியைச் சேர்ந்த ரி. துரைச்சாமி என்பவர் பலத்த காயங்களுடன் காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். பஸ்ஸுக்கு சிறிது சேதம் ஏற்பட்டுள்ளது. சாரதியும் பஸ்ஸும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

## பயங்கர கொள்ளை..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கரிக்கவே; யாழ்ப்பாணத்தைத் தற்காலிகமாகவிட்டு வவுனியா மாவட்டத்தில் தமது தொழிலை ஆரம்பித்தனரென்றும் யாழ்ப்பாணப் பொலிசார் திரு. மரியநாயகத்தின் தலைமையில் அயராது அவர்களின் நடமாட்டங்களை மிகக்கவனமாகக் கண்காணித்து வந்தனரென்றும் அதன் பலனுகக் கொள்ளையடித்த பொருட்களுடன் அக் கோஷ்டியினரைச் சேர்ந்த 6 பேர்களையும் தலைவனையும் கைதாக்கியுள்ளனரென்றும் அறிவிக்கப்பட்டது.

கேற்று முன்தினம் பொலிஸ் குற்றப்பகுதி அதிபர் இன்ஸ்பெக்டர் திரு. கனகசிங்கத்திற்குக் கிடைத்தஒரு தகவலைக் கொண்டு அவர் ஒரு பொலிஸ் கோஷ்டியுடன் கைதடியில் ஒளிந்து நின்று CY 4955 இலக்கத்தைக் கொண்ட ஒரு பிரத்தியேக நபருடைய கார் சாவகச்சேரிப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி வந்தபொழுது அதை மறித்து இக்கொள்ளைக் கூட்டத்தினரைப் பிடிக்கக்கூடியதாயிருந்தது. இன்ஸ்பெக்டர் கனகசிங்கம் இக்கோஷ்டியினரைக் கைதாக்கிய பொழுது காரினுள் கொள்ளைக்குரிய ஆயுதங்களான ஒரு லைசென்ஸ் இல்லாத துவக்கு, பல தோட்டாக்கள், கத்திகள், கதவுகள் உடைக்கும் ஆயுதங்கள், பலதரப்பட்ட ஸ்குறூ ஆணிகள் கழற்றும் ஆயுதங்கள், பொலிடோல் கொண்ட ஒரு தகரம், மயக்க மருந்தான குளோறபோம் கொண்ட ஒரு போத்தல், கையுறைகள், கயிறுத்துண்டுகள், இரும்புக் கம்பிகள் கறுப்புசேட்டும் காற்சட்டைகளும், பஞ்சம் காணப்பட்டன. அத்துடன் சேலைகளும், சேட்துணிகளும், சீத்தைத் துணிகளுமாக பல்லாயிரக் கணக்கான ரூபாய் பெறுமதியுள்ள துணிவகைகளுமிருந்தன.

இத்துணி வகைகள் நெடுங்கேணி, ஓமந்தை ஆகிய இடங்களிலுள்ளமொத்த விற்பனவுக் கூட்டுறவு ஸ்தாபனத்திலிருந்து ஆங்காங்கு இருந்த காவலாளிகளை குளோறபோம் கொடுத்து மயக்கியபின் கதவுகளை உடைத்து எடுக்கப்பட்டவையென இன்ஸ்பெக்டர் கனகசிங்கம் கண்டு பிடித்தார்.

கைதாக்கப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலிருந்து வவுனியா மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜராக்கி அவரின் கட்டளையின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# பொலனறுவை...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

சோழர் ஈழநாட்டை விட்டுப் போயினர். பொலனறுவையை 1-ம்விஜயபாகுவை சோழரிடம் இருந்து கைப்பற்றி சிங்கள அரசை இருநூறு ஆண்டுகள் வரை நிலைநாட்டினன். பொலனறுவைக்குப் பின் இயப்பாகுவும் (13-ம் நூற்றுண்டு) தம்பதேணியாவும் (கி. பி. 1240-1301) அதன் பின் குருநாகலும் (கி. பி. 1319 – 1347) தலைநகரங்களாயின. பொலநறுவை சிறது சிறிதுதாக காலவட்டத்தில் அழிந்த நகரமாக மாறிற்று. போத்துக்கீசருடைய காலம் இந்து சமயத்திற்கு இருள்சூழ்ந்த காலம்; அவ்வாறே டச்சுக்காரருடைய காலமும் இருந்தது. பிரிட்டிஷ் காலந்தொட்டு 1815 க்குப் பின் பழைய சமயமானது தலை எடுக்க ஆரம்பித்தது எனலாம்.

1908-ம் ஆண்டு எச். சீ. பீ. பெல் என்பவர் புதைபொருள் ஆராய்ச்சித்துறை அதிகாரியாக நியமிக்கப்பட்ட பொழுது, அநுராதபுரம், பொலநறுவை இரண்டும் காடுகளாக இருந்தன.

பொலனறுவைக் காடு வெட்டப்பட்டபின்பு, இங்கு இரு சிவன் கோவில்கள், இன்றும் அழகு குன்றாமல் இருக்கின்றதை நாம் கண்டு வியக்கக் கூடியதாக இருக்கிறது. இங்கு உள்ள வானவன் மாதேவி ஈஸ்வரமுடையாரில் (சிவன் கோவில் இல. 2) இருக்கும் (சிவன் கோவில் இல. 1) இருந்தும் வேறு (இல. 5) கோவிலில் இருந்தும் சிறந்த வெண்கலப் படிவங்களை எடுத்து அவை கொழும்பு பொருட்காட்சிச் சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளன. வானவன் மாதேவி ஈஸ்வரமுடையார் ஒருகருங்கற்றிருப்பணி. இது விஜயபாகுவின் காலத்திலும் அவன்பின் விக்கிரமாகுவின் காலத்திலும் 2-ம் பராக்கிரமபாகுவின் காலத்திலும் பாதுகாக்கப்பட்டு வந்தது.

இக்கோவிலுக்குள் யாத்திரிகர்கள் கூச்சமின்றிச் சப்பாத்துடன் போய்வந்த காலம் மறைந்துவிட்டது. 1949-ம் ஆண்டு இப்பொலநறுவையில் தொல்புரம் தையல்பாகனர் அவர்கள் இன்ஜினியராகக் கடமையாற்றினர். அவர் இக்கோவிலின் துக்ககரமான நிலையை உணர்ந்து, அப்பகுதிச் சைவர்களை எல்லாம் சேர்த்துப் "புலஸ்தியபுர இந்து மகாசபை" ஒன்றினை நிறுவினர். அதற்குத் தலைவராக இருந்தும் உழைத்தார். இச்சபை செவ்வாய்க் கிழமை வெள்ளிக்கிழமை தோறும், அரசாங்க அதிகாரிகளிடம் திறப்பைப்பெற்று விளக்கேற்றி அபிஷேகம் செய்வித்து, பஜனைசள் நடத்தி வருகின்றது. அக்காலத்தில் கல்வி அமைச்சராக விளங்கிய கே. கனகரத்தினம் அவர்கள் முயற்சியால் இதுகைகூடிற்று. 1950-ம் ஆண்டு இலங்கைப் பல்கழகப் பேராசிரியர் மயில்வாகனம் அவர்கள் இக்கோவிலுக்கென தூண்டாமணி விளக்கொன்று வாங்கி உதவியுள்ளார். இதனை ஏற்றும் செலவையும் இச் சபையாருக்கு உதவியுள்ளார். 1949-ம் ஆண்டு தொடக்கம் 1958-ம் ஆண்டுவரையும் பஜனை முதலியன ஒழுங்காக நடைபெற்றது. அதன்பின் 1959-ம் ஆண்டு தொடக்கம் ஆனி உத்தரம் தோறும் பொலனறுவை வானவன் மாதேவி ஈசுரமுடையார் கோவிலில் விசேட அபிஷேகம், அன்னதானம் முதலியன நடைபெற்று வருகின்றன. இதெற்கென வகுவிக்கப்பட்ட பணத்தை இச் சபை திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையாருக்கு உதவி, அவர்களையே 1862-ம் ஆண்டு ஆனி உத்தரம் தொடக்கம் இத்திருப்பணியைச் சரிவர நடத்தி வருகின்றனர்.

இக்கோவிலில் இருந்தும் பிறிது இருந்த பொலனறுவைச் சிவன் கோவில்களில் இருந்தும் இன்று கொழும்பு பொருட்காட்சிச் சாலையில் காணப்படும் வெண்கலப் படிவங்கள் தமிழர் செய்த உருவச் சிற்பங்கள் உலகின் கலைச் செல்வங்கள் என கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் மதிப்பிட்டுள்ளார். சுந்தரமூர்த்தி நாயனர் சிலையைப் போன்ற சுந்தர வடிவத்தைக் காண்பதரிது என்று கலைப் புலவர் க. நவரத்தினம் அவர்கள் கூறியுள்ளார்.

# மயிலிட்டி மீன்பிடியாளர் கஷ்டம் தீர்ந்தது

யாழ்ப்பாணம், சனி

ஏறக்குறைய 100 யார் நீளத்திற்கு அடிக்கப்பட்ட களக்கட்டையினுல் சென்ற இரண்டு வாரங்களாகப் பாதிக்கப்பட்ட சேந்தான்குள் மீன்பிடியாளர்கள் நேற்றுடன் கவலை தீர்ந்து நிம்மதியாகத் தம் வாழ்க்கையை நடத்த வலிகாமம் வடக்கு காரியாதிகாரி உதவியுள்ளார்.

நான்கு மைல்களுக்கு அப்பாலுள்ள மயிலிட்டியிலுள்ள ஒரு செல்வாக்குள்ள மீன்பிடியாளர் இலாகா மீன்பிடி உத்தியோகத்தர்களினதும் பொலிஸ், இராணுவ உத்தியோகத்தர்களினதும் உதவியுடன் ஏறக்குறைய 100 யார்வரை களக்கட்டை அடித்து மீன் பிடித்துவந்தனர்.

தங்களின் குறைகளை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீராவிடம் முறையிட்டதன் பலனுக உடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு களக்கட்டைகள் அவ்விடத்திலிருந்து நீக்கடபட்டன.

## மாணவ ஆசிரியர் நியமனம்

கொழும்பு, சனி

மாணவ ஆசிரியர்களுக்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 30-ம் தேதி செவ்வாய்க்கிழமைக்குள் அனுப்பப் படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**VACANCY**

**Store-Keeper cum Clerk**

The Valikamam West M. P. C. S. Union, Chankanai needs a Store-keeper cum Clerk to work at their Salterns at Kallundai. The post will be temporary in the first instance.

**Qualifications:**

(1) S. S. C. with a pass in English or G. C. E. (O) Level with a credit pass in the 'B' Syllabus or Ordinary pass in the 'A' Syllabus.

(2) Skill and experience in English Typing.

(3) Knowledge and experience in Book-keeping and accounts in English.

(4) Age between 20 and 40 on the closing date.

Salary: Rs.250/- per month.
Security: Rs. 2500/- cash.

Application from pensioners will not be entertained.

Application Should be sent by registered post to the Secretary or handed in personally at the Union's Office on or before Wednesday the 8th July with the name of post written clearly on the upper left hand corner of the envelope.

Administrative Secretary
Valikamam West Multi-purpose Co-op. Societies Union Ltd.,
Chankanai.

27-6-64 619

## குழந்தை கிணற்றில் விழுந்து மரணம்

மாவிட்டபுரம், சனி

பெற்றோர்களின் கவனயீனத்தால் இரண்டரை வயது பெண்குழந்தை ஒன்று கிணற்றில் விழுந்து மரணமான பரிதாபசம்பவம் ஒன்று அளவெட்டியில் நடைபெற்றுள்ளது.

அளவெட்டி அருணேதயாக் கல்லூரி அதிபர் திரு. எஸ். சிவசுப்பிரமணியத்தின் இரண்டரை வயது மகளான தயாளினி கிணற்றில் விழுந்து மரணமானதைத் தொடர்ந்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். ரி. நடராசா மரணவிசாரணை நடத்தினர். சுன்னுகம் பொலிசைச் சேர்ந்த திரு. தியாகராசா சாட்சிகளை ஆஜர் செய்தார். திரு. எஸ். சிவசுப்பிரமணியம், திரு. வயிரவி கணபதி, அளவெட்டி ஆஸ்பத்திரி அப்போதிக்கரி ச. பாலசிங்கம் ஆகியோர் சாட்சியமளித்தபின் மரணவிசாரணை அதிகாரி விபத்தினுல் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## தட்டுப்பாடு இருக்காது

### எம். பி. உறுதி

உடுப்பிட்டி, சனி

தமிழ் மக்களின் முக்கிமாகச் சைவசமயத்தவர்களின் முக்கிய தேவைப் பொருட்களான கற்பூரம், சர்க்கரைமுதலியன இனிமேல் இந்தியாவிலிருந்து கூடுதலாக இறக்குமதி செய்யப்படும் என்றும் குறிப்பாக வடமராட்சிப்பகுதி மக்களுக்கு கூடுதலாக விநியோகம் செய்யப்படுமென்றும் உடுப்பிட்டி எம் பி. திரு. மு சிவசிதம்பரம் நமது நிருபரிடம தெரிவித்தார்.

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் குரோதி வருடம் ஆனி மாதம் 16-ம் திகதி (29-6-64) மாலை 6 மணி வரையில் எமது மகள் திருநிறை செல்வி தவலோகநாயகி அம்மாளுக்கும், காலஞ்சென்ற மார்க்கண்டுவின் மகன் திருநிறை செல்வன் மகாதேவா B Sc (Ceylon) (ஆசிரியர், மகிந்தா கல்லூரி, காலி) அவர்கட்கும், திருமணம் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உறவினர்களையும் நண்பர்களையும் சமூகம்தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
வே. சோமசுந்தரமும் பாரியாரும்,

1, ஆடியபாதவீதி,
நல்லூர். 620

## தேசிய லொத்தர் (சுவீப்)

ஏக விநியோகஸ்தர்கள் (Sole Agents)

### கொழும்பு பிளான் ஜுவலறி கவுஸ்

நல்லூர், யாழ்ப்பாணம்.

தந்தி: சீதேவி தொலைபேசி: 461

10வது சுவீப்பில் எங்களால் விற்பனை செய்யப்பட்ட டிக்கட்டுகளில் கீழ்க்காணும் இலக்கமுடைய டிக்கட்டுகளுக்கு பரிசுகள் கிடைத்திருக்கின்றன. டிக்கட்டுகளின் விபரங்கள்:

01 M 0572 01 S 0336 07 U 0689
07 F 0689 05 V 0152

மேற்படி டிக்கட்டுகள் உள்ளவர்கள் பரிசுத் தொகைப் பெருவிடில் எம்முடன் உடனடியாக தொடர்புகொள்ளவும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனதாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 58-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டுஜூன் மாதம் 28-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.